வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959


Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு


Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 17.03.2025 திங்கட்கிழமை இதழ் : 78 பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# பட்டலந்த அறிக்கையை நான் நிராகரிக்கின்றேன்

## ரணில் விக்கிரமசிங்க



**கொழும்பு, மார்ச் 17**

**பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையில் எனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை நான் நிராகரிக்கிறேன். 1999ஆம் ஆண்டு பட்டலந்த ஆணைக்குழு என்னை ஒரு சாட்சியாகவே அழைத்திருந்தார்கள் - இவ்வாறு தெரிவித் துள்ளார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

25 வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட பட்டலந்த ஆணைக்குழு வின் அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை பாரா ளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டது. இந்த நிலை யில், பட்டலந்த சித்திர வதை முகாம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடு மையாக விமர்சிக்கப்பட் டார். இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க நேற்றைய தினம் காணொலி ஒன்றை வெளியிட்டார். அதில் அவர் தெரிவித்தவை வரு மாறு,

"1987ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை ஒப் பந்தத்தின் பின்னர் ஜே. வி. பி. நாடு முழுவதும் வன்முறையை கட்ட விழ்த்து விட்டார்கள். அந்தக் கட்டத்தில் நாட் டின் பாதுகாப்பை நிலை நாட்டும் பொறுப்பு ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் அமைச்சர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டது.

பியகம எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், மகாவலியில் இருந்து கொழும்புக்கு மின் சார விநியோகம்

11

# இலங்கையால் சீனாவுக்கு 700 கோடி டொலர் நட்டம்!

## சீனத் தூதுவர் சென்ஹொங்

கொழும்பு, மார்ச் 17

இலங்கையுடனான வெளிநாட்டுக் கடன்மறுசீர மைப்பால் சீனாவின் பிரதான ஏற்றுமதி, இறக்குமதி பங்குதாரரான சீன எக்ஸிம் வங்கிக்கு 700 கோடி அமெ ரிக்க டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்தார்.

அத்துடன், தெற்காசியாவில் இலங்கை, இந்தியா, சீனா ஆகியன ஒன்றிணைந்து 'கூட்டுச் செயல் திட்ட மொன்றை' முன்னெடுக்க வேண்டும்

11

# போட்டியிடும் சகல சபைகளிலும் தமிழ் அரசு கட்சி ஆட்சியமைக்கும்

## சுமந்திரன் நம்பிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 17

இலங்கை தமிழ் அரசுக் கட்சி போட்டியிடும் சகல உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சியை கைப்பற்றும் - இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார் அந்தக் கட்சி யின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன்.

முல்லைத்தீவில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நியமனம் தொடர்பில் நடந்த கட்சியின் கலந்து ரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு

11

# பட்டலந்த அறிக்கையின்படி சட்ட நடவடிக்கை எடுப்போம்

## அரசாங்கம் அறிவிப்பு

- ரணில் பேச தாமதமாகிவிட்டது



கொழும்பு, மார்ச் 17

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பட்ட லந்த ஆணைக்குழு அறிக்கை குறித்து பேசுவதற்கு மிக வும் தாமதமாகி விட்டது. அந்த அறிக்கையின் அடிப் படையில் அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று தெரி வித்தார்.

11

# பட்டலந்த விவகாரத்தில் அரசாங்கம் நாடகமாடுகிறது!

## முன்னாள் ஜே. வி. பி. முக்கியஸ்தர்

கொழும்பு, மார்ச் 17

"1988 - 1990 காலகட்டத்தில் பாதிக்கப்பட்டவர் களுக்கு உண்மையான அக்கறைக்கு பதிலாக, அரசாங்கம் மீண்டும் பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை கொண்டு வந்து ஊடக நாடகம் ஆடுகிறது", இவ்வாறு ஜே. வி. பியின் முன்னாள் முக்கியஸ்தரான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

தற்போது தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அவர் தனது எக்ஸ் தளத்தில் பதி விட்டவை வருமாறு,

11

# ஓ.எல். பரீட்சை இன்று ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 17

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகிறது. 4 இலட் சத்து 78 ஆயிரத்து 182 பரீட்சார்த்திகள் பரீட் சைக்கு தோற்றவுள்ளனர். 3 இலட்சத்து 98 ஆயி ரத்து 182 பரீட்சார்த்தி கள் பாடசாலைகள் மூல மாக தோற்றுகின்றனர்.

இந்தப் பரீட்சைக்காக நாடு முழுவதும் 3 ஆயி ரத்து 663 பரீட்சை நிலை யங்கள் அமைக்கப்பட் டுள்ளன. அத்துடன், பரீட்சை நடைபெறும் நாட்களில் பாடசாலை களை சுற்றி சிறப்பு பாது காப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந் தர நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

"பரீட்சை எழுதத் தேவையான பேனா, பென்சில் போன்ற பொருட்களை நீங்கள் பரீட்சை மத்திய நிலை யத்துக்கு கொண்டு வர லாம். வேறு எதையும் எடுத்துச் செல்ல முடி யாது. அனுமதி அட் டையை கட்டாயம் கொண்டுவர வேண்டும்.

கைபேசிகள், ஸ்மார்ட் கைக்கடிகாரங்கள் மற் றும் கைபேசிகளு டன் பயன்படுத்தக் கூடிய எந்தவொரு

11

# அரச தாதியர் சங்கம் இன்று அடையாள வேலைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 17

அரச தாதியர் சங்கம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை 3 மணித்தி யாலங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வுள்ளதாக அறிவித்துள்ளது.

பதவியுயர்வு வழங்கப்படாமை, சம்பள குறைப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அரச தாதியர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார். (ஐ)

# வாக்குறுதியை நிறைவேற்றாவிடின் வீதிக்கு இறங்கத் தயங்க மாட்டோம்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, மார்ச் 17

எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி 6ஆவது ஆண்டு நினைவுதினத் துக்கு முன்பாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குத லில் பாதிக்கப்பட்டோ ருக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதாக அரசு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்க பின்னிற்க மாட் டோம் - இவ்வாறு கர்தி னால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

2025 ஜுபிலி ஆண்டை முன்னிட்டு கொழும்பு மறை

11

# நோயாளரை சிரமப்படுத்தினால் மக்கள் பக்கம் நின்றே தீர்மானம்

## சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 17

நோயாளரை பணயம் வைத்து அவர்களை சிர மங்களுக்கு உள்ளாக்கி சுகாதார சேவையை சீர்கு லைக்கும் வகையில் எவ ரேனும் செயல்பட்டால் அரசாங்கம் மக்கள் பக்க மிருந்து தீர்மானங்களை எடுப்பதற்கு கடமைப்பட் டுள்ளது - அதற்காகத் தயங்காமல் செயல்படத் தயாராக உள்ளோம் - என்று சுகாதார அமைச் சர் நளிந்த ஜயதிஸ்ஸ எச்சரித்துள்ளார்.

மேலும்,

11

வெலிகம துப்பாக்கிச்சூடு வழக்கு:

# தென்னக்கோனை மட்டும் கைது செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, மார்ச் 17

மாத்தறை - வெலிகம துப்பாக்கிச்சூட்டு சம்ப வத்தில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேச பந்து தென்னக்கோன் தவிர்ந்த ஏனைய 6 பேரையும் கைதுசெய்யவேண்டாம் என்று

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத செயலில் ஈடுபடுவோர் பொலிஸாருடன் நட்பாக உள்ளனர்!

## முறையிடவும் அச்சத்தில் மக்கள் என்கிறார் ஆளுநர்



கிளிநொச்சி, மார்ச் 17

**சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் பொலிஸாருடன் நட்பாக இருக்கின்றனர். இதனால், பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யமக்கள் அஞ்சுகின்றனர். இது ஆபத்தான நிலைமை என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் 15ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று நடைபெற்றது. யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், போர்ச் சூழலிலும் கல்விக்கான வசதிகள் உள்ளிட்ட சகல சேவைகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன. வளங்கள் குறைவாக இருந்தாலும் மக்களின் தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்தோம்.

இன்று வளங்களும், தொடர்பாடலும் பெருகிவிட்டாலும் மக்களுக்கான சேவைகள் அருகிவிட்டன.

அன்றைய எமது சேவைகளுக்கும் இன்றைய காலத்து சேவைகளுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. இன்று பொது மகன் அரச திணைக்களத்துக்கு சென்றால் அரசாங்க அதிகாரிகள் பந்தடிப்பது போன்று அலைக்கழிக்கின்றனர். அல்லது இழுத்தடிக்கின்றனர்.

போர் காலத்தில் பணியாற்றியவர்கள் மக்களுக்கு சேவை செய்யும் நோக்குடன் பணியாற்றினார்கள். இன்று அப்படியல்ல.

கடந்த காலங்களில் அரசியலுக்காக ஒரு சில அரசாங்கத் தொழில்கள் உருவாக்கப்பட்டன. தொழிலுக்காக சம்பளம் வழங்கவில்லை. சம்பளம் வழங்கவேண்டும் என்பதற்காக அரசாங்கத் தொழில்கள் உருவாக்கப்பட்டன. இதனால் உருவாகிய அரசாங்க அதிகாரிகள் பலர் தங்கள் சேவைகளை வினைத்திறனுடன் முன்னெடுக்கிறார்கள் இல்லை.

ஏழையை கண்டால் உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் இயல்பாக மனதில் எழ வேண்டும். அப்படி சிந்திப்பவர்கள் இன்று குறைவு. ஏழைக்கு செய்யும் சேவையும் பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்யும் சேவையும்தான் மிகப் பெரிய சேவை - என்றார். (ஐ)



# புழுதியாறு ஏற்றுநீர்ப்பாசனத்தை நேரில் பார்வையிட்டார் ஆளுநர்!

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி திருவையாற்றில் முன்னெடுக்கப்படும் ஏற்று நீர்பாசனத் திட்டத்தையும் புழுதியாற்றில் கைவிடப்பட்டுள்ள ஏற்று நீர்பாசனத் திட்டத்தையும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் நேற்று நேரில் பார்வையிட்டார்.

திருவையாறு ஏற்று நீர்பாசனத் திட்டத்தின் கீழ் 500 ஏக்கரில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதாக நீர்பாசனப் பொறியியலாளர் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார்.

அங்கு சூரியமின்கலம் (சோலர்) மூலமான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படுவதால் ஏற்று நீர்பாசனத்துக்காக விவசாயிகளிடமிருந்து குறைவான தொகையே அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலம் 3 கோடி ரூபாய் வரையில் இலாபம் பெறப்பட்டுள்ளதாகவும் அதனைப் பயன்படுத்தி மேலதிக சூரியமின்கலம் மூலமான மின்சார உற்பத்தியை அதிகரித்தால் விவசாயிகளிடமிருந்து மாதாந்தம் பெறப்படும் தொகையை குறைக்க முடியும் எனவும் கிளிநொச்சி மாவட்ட செயலர் இதன்போது ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார்.

இதன் பின்னர் புழுதியாற்றுக்குளம் மற்றும் புழுதியாற்று ஏற்று நீர்பாசனத் திட்டத்தை ஆளுநர் சென்று பார்வையிட்டார்.

2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் 2018ஆம் ஆண்டு கைவிடப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். 70 ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிட்டனர்.

தற்போது இந்தத் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு 7 கோடி ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# தங்க பிள்ளையாரை கடத்தியவர் கைது!

மன்னார், மார்ச் 17

தங்கத்தில் செய்தது என்று கருதப்படும் பிள்ளையார் சிலையை கடத்திச் சென்றவரை மன்னார் - முருங்கன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் மன்னாரிலிருந்து கொழும்பு சென்ற பேருந்தில் சோளம் நிரப்பப்பட்ட பை ஒன்றில் பிள்ளையார் சிலையை மறைத்து எடுத்துச் சென்றுள்ளார்.

இதன்போதே, முருங்கன் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். கைதானவர் 36 வயது நபராவார்.

சிலையை விற்பனை செய்யும் நோக்கத்திலேயே கொழும்புக்கு கொண்டு சென்றதாகவும் சிலை தங்கமா என்று சரிபார்ப்பதற்காக பிள்ளையாரின் தும்பிக்கை மற்றும் கைகளை உடைத்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், குறித்த சிலையை தனது மாமனார் வழங்கியிருந்தார் என்று பொலிஸ் விசாரணையில் சந்தேகநபர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கச்சதீவில் நகை திருடிய பெண்ணுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், மார்ச் 17

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்துக்கு வந்த பெண்ணின் 4 பவுண் தங்கச் சங்கிலியை திருடிய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நெடுந்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீல் காங்கர தெரிவித்தார்.

கைதான பெண் 33 வயதுடையவர் என்றும் வவுனியாவை சேர்ந்தவர் எனவும் தெரிவித்த பொலிஸார் அவரிடம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான எந்த ஆவணமும் இருக்கவில்லை என்றும் கூறினர். அத்துடன், குறித்த பெண், தனது விவரங்களை மாற்றிமாற்றி கூறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதான பெண்ணை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

# கொலன்னாவை எரிபொருள் சேமிப்பக குழாய் சேதம்!

கொழும்பு, மார்ச் 17

கொழும்பு துறைமுகத்தையும் கொலன்னாவையிலுள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சேமிப்பு முனையத்தையும் இணைக்கும் எரிபொருள் குழாய்களில் ஒன்றில் சேதம் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

எரிபொருள் வழங்கும் இரண்டு குழாய்களில் ஒன்றில் சேதம் ஏற்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மற்றைய குழாயை பயன்படுத்தி போதுமான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# கணித, விஞ்ஞான துறையை தெரிந்து கற்கும் மாணவர் தொகை குறைகிறது

**பேராசிரியர் சசிகேஷ்**

யாழ்ப்பாணம், மார்ச் 17

கணித, விஞ்ஞான துறைகளில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கிறது என்று யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் துறை பேராசிரியர் க. சசிகேஷ் கவலை வெளியிட்டுள்ளார்.

தெல்லிப்பழை மகாஜன கல்லூரியில் கணித, விஞ்ஞான திறன்காண் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், விருந்தினராக பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கணித விஞ்ஞான துறைகளை மாணவர்கள் தெரிவு செய்வது குறைவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இது தவறான கண்ணோட்டமோ தவறான புரிதலோ என்பது புரியாதுள்ளது.

கணித விஞ்ஞான துறைகளை விட கலைத்துறையில் வேலைகளை பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலையும் காணப்படுகிறது. ஆனால், கணித விஞ்ஞான துறையில் வேலை இல்லை என்று கூறுவதில்லை.

படித்து முடிந்த கையோடு ஆகக் குறைந்தது. ஒரு வருடம் காத்திருக்க வேண்டிவரும் அதற்குள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வேலை கிடைத்துவிடும் அல்லது மேற்படிப்புக்கு செல்லலாம்.

கணித, விஞ்ஞான துறைக்கு தற்போதும் ஆசிரியர்கள் பற்றாகுறையாகவே உள்ளது. மாணவர்களை பெற்றோர், ஆசிரியர்கள் சரியான முறையில் தெளிவுபடுத்தல்களை, தயார்படுத்தல்களை செய்தால் அந்தத் துறையில் மாணவர்களை முன்னேற்றமடைய செய்யலாம்.

ஏனைய துறைகள்போல் வேலையில்லா போராட்டம் - வேலையில்லா பிரச்னைக்குள் சிக்குப்படத் தேவையில்லை என்பது எனது கருத்து. தற்போதைய சூழலில் - குறிப்பாக 2009 ஆண்டு யுத்தத்துக்குப் பின்னரான சூழலில் யாழ். பல்கலைக்கழகத்தில் கணித, விஞ்ஞான துறையில் 65 வீத மாணவர்கள் தென்னிலங்கையை சேர்ந்தவர்களே கல்வி கற்கிறார்கள். தமிழ் மாணவர்களின் வீதம் குறைந்து கொண்டு செல்கிறது - என்றார்.

# மகா கும்பாபிஷேகம்

வடமராட்சி, மார்ச் 17

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் ஆலய (பருத்தித்துறை சிவன் கோவில்) அம்பாள் வாசல் இராஜகோபுர (தெற்குக் கோபுரம்) மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9.47 மணிமுதல் முற்பகல் 10.45 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தசதர் சணம் திருக்கதவு திறத்தல், எஜமான் அபிஷேகம் ரக்சபந்தன விமர்சனம், ஆசீர்வாதம் வழங்கப்படும்.

ஆலய பிரதம குருக்கள் சிவசிறீ சோ. ஜெயந்த குருக்களின் உதவியுடன், பிரதமகுரு முத்தமிழ் குருமணி சர்வேஸ்வர குருக்களின் அருளாசியுடன் ஆகம வித்தியா கீர்த்தி சிவசிறீ நேசக்குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (ஐ)

# குற்றச் சந்தேகநபர்கள் ஹெரோயினுடன் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 17

பல்வேறு கொள்ளை மற்றும் திருட்டுகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி - விநாயகபுரம் பகுதியில் வைத்து இவர்களை கிளிநொச்சி குற்றப் புலனாய்வு பிரிவு விஜயராஜா தலைமையிலான பொலிஸ் குழு கைது செய்தது.

கைதானவர்களிடம் திருடப்பட்ட 5 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தங்க நகைகள் மீட்கப்பட்டன. அத்துடன், ஒருவரிடமிருந்து 5.5 கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்கள் நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றபதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது.

கைதான சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், அக்கராயன் குளம், கரடியனாறு, ஏறாவூர் பகுதிகளில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ - 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
17.03.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், பங்குனி 3

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தேர்தல் கூட்டுகள்

பாராளுமன்றத் தேர்தல் படிப்பினைகளால் ஏற்பட்ட அச்சம் புதிய கூட்டுகளுக்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஒவ்வொரு கட்சியும் இயலுமான வகையில் மற்றவர்களை இணைத்துக் கொண்டு புதிய கூட்டுகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. இதுவரையில் தங்களை மட்டுமே தமிழ்த் தேசிய சுத்தவான்களாக காண்பித்துக் கொள்வதில் தீவிரம் காட்டி வந்த கஜேந்திகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் மற்றவர்களை இணைத்துக் கொண்டு பயணிக்கும் கூட்டு முயற்சிக்குள் தலைகாட்டியிருப்பதானது தேசிய மக்கள் சக்தி எந்தளவுக்கு தமிழ்த் தேசியம் பேசிய கட்சிகளை கதிகலக்கியிருக்கிறது என்பது தெளிவானது.

தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு, கிழக்கில் குறிப்பிடத்தகுந்த வெற்றியை பெற்றுவிடக்கூடாது என்பதில்தான் அனைவரும் கவனம் செலுத்துவதைக் காண முடிகிறது. பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெற்றுக் கொண்ட வெற்றியானது தற்போது அவர்களுக்கான பலமான அரசியல் முதலீடாக மாறிவிட்டது. அதனைக் கொண்டே தேசிய மக்கள் சக்தியானது இனப்பிரச்னை என்று ஒன்றில்லை என்பதான தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறது.

உலக ஜனநாயக முறைமையின் கீழ் நோக்கினால் தேசிய மக்கள் சக்தியின் வாதத்தை சாதாரணமாகத் தட்டிக்கழித்துவிட்டு கடந்து செல்ல முடியாது. ஏனெனில், மக்களின் ஆதரவைக் கொண்டுதான் அரசியல்ரீதியான நிலைப்பாடுகள் நியாயப்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் தமிழ்த் தேசிய கட்சிகளை பெருமளவில் புறந்தள்ளி தேசிய மக்கள் சக்தியை நோக்கி தமிழ் மக்கள் வாக்களித்திருக்கின்றனர் என்னும் செய்தி அரசியல் ரீதியில் மிகவும் கனதியானது. இதே வேளை, அரசியல் ரீதியில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகளின் மோசமான பின்னடைவாகும். குறிப்பாக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான முன்னணி தமிழ் மக்களின் சார்பில் பேசும் அரசியல் தகுதியுடன் இருக்கிறதா என்ற கேள்வியையே தேர்தல் முடிவுகள் நிரூபித்திருக்கின்றன.

இந்த நிலையில்தான் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியைப் பெறுவதன் ஊடாக - தேசிய மக்கள் சக்தியை சற்று தள்ளுவதன் ஊடாக - மக்கள் எங்களுடன்தான் இருக்கின்றனர் என்பதைக் காண்பிப்பதற்கான தேவைப்பாடு தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்வதாகக் காண்பித்துக் கொள்ளும் கட்சிகள் மத்தியில் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக மாறியிருக்கிறது.

ஆனால், இவ்வாறான நெருக்கடியின்போதுகூட கடந்த காலத் தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு தமிழ் கட்சிகள் முயற்சிப்பதாகத் தெரியவில்லை. இப்போதும் காலாவதியாகிப்போன தேசியத் தரப்பு - தமிழ்த் தேசிய எதிர்த் தரப்பு என்னும் பிளவை முன்னிலைப்படுத்தி சிந்திக்க முற்படுகின்றன. துரோகி - தியாகி என்னும் சொற்களின் வழியாக அரசியலை நோக்கும் நோய்க்கூறிலிலிருந்து இன்னும் விடுபட முடியாதவர்களாகவே சிலர் இருக்கின்றனர்.

ஒருவரை இணைத்தால் நாங்கள் வரமாட்டோம் என்று கூறும் சிறுபிள்ளை அரசியலிலேயே இப்போதும் சில கட்சிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்த் தேசிய அரசியல் என்பது புனித வாதமல்ல - மாறாக, இலங்கைத் தீவில் மேலாதிக்கம் செலுத்த முற்படும் தென்னிலங்கை அரசியலை எதிர்கொள்வதற்கான ஒரு கருவியாகவே தமிழ்த் தேசியம் வெளிப்பட்டது. ஆனால், தற்போது அந்த நிலையில் அது இல்லை. வெறுமனே தங்களின் கதிரைகளை பாதுகாத்துக் கொள்வதற்கான தேர்தல் அரசியலாகவே அது மாறிவிட்டது. இந்த நிலையில் தற்போது ஆளுக்கொரு கூட்டு தொடர்பில் சிந்திப்பதும் வெறும் தேர்தல் நலனுக்கானது மட்டும்தான். யாழ்ப்பாணத்தில் தங்களுக்கான கதிரைகளைப் பாதுகாக்க வேண்டும் - அதற்கு சில கூட்டுகள் தேவைப்படுகின்றன.

## உள்ளூராட்சி சபை தேர்தல் குறித்த தேர்தல் திணைக்களத்தின் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தொடர்பான முக்கிய விவரங்கள் தொடர்பான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு அறிக்கையிட்டுள்ளது.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகளைக் குறிப்பிடும் 11 முக்கிய விடயங்கள் இந்த அறிவிப்பில் உள்ளன.

இதன்படி, அங்கீகரிக்கப்படாத நபரால் சமர்ப்பிக்கப்பட்டாலோ அல்லது வேட்பாளர்களின் எண்ணிக்கை தேவையான தொகையுடன் பொருந்தவில்லை என்றாலோ வேட்புமனு தகுதி நீக்கம் செய்யப்படலாம், ஒரு வேட்பாளர் தனது வேட்புமனுவில் கையொப்பமிடத் தவறினால், அவர்களின் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்படும், மேலும் எந்த மாற்றுப் பெயரும் அனுமதிக்கப்படாது.

ஒரு வேட்பாளரின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டால், அவர் சார்பாக வைப்புச் செய்யப்பட்ட எந்தவொரு பத்திரமும் பறிமுதல் செய்யப்படும் என்பதையும் இந்த அறிவிப்பு உறுதிப்படுத்துகிறது. உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்று திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை மதியம் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

மாவட்ட செயலக அலுவலகங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்களில் தினமும் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை அவற்றை சமர்ப்பிக்கலாம், அங்கு தேர்தல் அதிகாரிகள் செயல்முறையை மேற்பார்வையிடுவார்கள். வேட்பாளர்கள் தங்கள் பத்திரத்தை வரும் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்குள் செலுத்தி முடிக்க வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதி வியாழக்கிழமை அறிவிக்கப்படும். இதனிடையே, மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டியா பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும், கட்டுப்பணத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் எதிர்வரும் 26 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கை தொழிலாளர் கட்சி வவுனியாவில் கட்டுப்பணம்

வவுனியா, மார்ச்.17

வவுனியா மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் இலங்கை தொழிலாளர் கட்சி வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் நாளை மறுதினம் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

இதற்கமைய, வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிக்குளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தொழிலாளர் கட்சி கங்காரு சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

இதற்கான கட்டுப்பணத்தை கட்சி முக்கியஸ்தர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செலுத்தினர். (எ-10)

## நலன்புரிச் சங்க நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச்.17

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாகத் தெரிவும் பொதுச்சபை கூட்டமும் நேற்று முன்தினம் மருத்துவமனையில் நடைபெற்றது.

இதில், மருத்துவமனையின் பொறுப்பு வைத்திய அதிகாரி கஜானா கெங்காதரன் தலைவராகவும், அ. இன்பராசா செயலாளராகவும், பேரின்பநாதன் பொருளாளராகவும், குலசிங்கம் உப தலைவராகவும், திருமதி கலைமதி உப செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இருந்து ஒவ்வொரு நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-05)

## கஞ்சா கலந்த மாவாவுடன் யாழில் மூவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், மார்ச்.17


உடுவில் பகுதியில் கஞ்சா கலந்த மாவாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடுவில், நாகம்மாள் கோவில் வீதி பகுதியில் நேற்றுமுன்தினம் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நட வடிக்கையின் போதே இவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவர் தலா 200 கிராமுடனும் மற்றையவர் 100 கிராம் கஞ்சா கலந்த மாவாவுடனும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் தற்போது சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பங்குனி - 17 திங்கட்கிழமை**
**குரோதி வருடம் - பங்குனி 03**
**நல்ல நேரம் : 6.00 - 7.00**
**ராகு காலம் : 7.30 - 9.00**
**திதி : திருதியை**



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதக மான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.

**கன்னி**
ராசிக்கு சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். அதிக வேலைச் சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். மன இறுக்கங்கள் உண்டாகும்.

**துலாம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும்.

**விருட்சிகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**தனுசு**
பிள்ளைகளால் மதிப்பு கூடும். உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். பிரச்னைகள் வரும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடிவடையும்.

வவுனியா மாணவன் கபிலாஸ் உருவாக்கிய

# இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தை பார்வையிட்ட தேர்தல் ஆணைக்குழுவினர்

வவுனியா, மார்ச்.17

இலங்கையில் முதன்முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தினூடாக வாக்களிப்பு மேற்கொண்டு வவுனியா பாடசாலை மாணவன் சாதனை படைத்துள்ள நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எஸ். அச்சுதன் உள்ளிட்ட குழுவினர் அதனை பார்வையிட்டனர்.

வவுனியா விபுலானந்தா கல்லூரிக்கு நேற்று முன்தினம் வருகை தந்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் தலைமையிலான குழுவினர் குறித்த மாணவனின் கண்டுபிடிப்பை பார்வையிட்டனர்.

மாணவன் கபிலாஸ் புத்தாக்க போட்டிக்காக உருவாக்கிய இந்த இலத்திரனியல் முறையிலான வாக்களிப்பு இயந்திரம், தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றது.

அத்தோடு, இந்த இயந்திரத்தை பயன்படுத்தி பாடசாலையில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நடைபெற்றது.



மாணவனால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் இலங்கையில் முதன் முறையாக ஒரு தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் தொடர்பில் அறிந்து கொண்ட தேர்தல்கள் ஆணைக்குழுவினர் அதனை பாடசாலைக்குச் சென்று பார்வையிட்டதுடன், அதன் செயன்முறை தொடர்பாகவும் அறிந்து கொண்டு மாணவனுக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

அத்துடன், அதனை மேலும் விருத்தி செய்வது தொடர்பாகவும் ஆலோசனைகளை வழங்கியதுடன் தேர்தல் நடவடிக்கைகள், தேர்தல் பயிற்சிகளில் பயன்படுத்துவது குறித்தும் தமது ஆணைக்குழுவுடன் பேசி ஆலோசிப்பதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது, வவுனியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அமல்ராஜ், பாடசாலை பிரதி அதிபர்களான திருமதி சுரேந்திரன், எஸ்.தர்சன், பாடசாலை ஆசிரியர் கள், உயர்தர மாணவர்கள், மாணவனின் பெற்றோர் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

(எ-10)

# பல இலட்சம் பெறுமதியான நகைகள் மீட்பு - மூவர் கைது

மன்னார், மார்ச்.17

மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாந்திபுரம் பகுதியில் கடந்த மாதம் 26 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று இரவு திருடப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளதுடன், திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து சுமார் 28




இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை பொலிஸார் மீட்டனர்.

சந்தேக நபர்கள் மன்னார் சாந்திபுரம் மற்றும் பனங்கட்டுகொட்டுப் பகுதி யைச் சேர்ந்த 28,29 மற்றும் 33 வயதுடையவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட மூவரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான வர்கள் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்கள் மூவரும் மேலதிக விசாரணை களின் பின்னர் மன்னார் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட வுள்ளனர்.

(எ)

# கனகராயன்குளத்தில் திருட்டு: யாழ்.இளைஞன் மடக்கி பிடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.1 7

யாழ்ப்பாணத்திலிருந்து சென்று கனகராயன்குளம் பகுதியில் உள்ள வீடுகளில் புகுந்து திருட்டில் ஈடுபட்ட நிலையில் இளைஞன் ஒருவர் அப் பகுதி மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

வவுனியா, கனகராயன் குளம், குறிசுட்ட குளம் பகுதியில் உள்ள மூன்று வீடுகளில் கடந்த 14 ஆம் திகதி இரவு தொலைபேசி மற்றும் தங்க நகைகள் என்பனவற்றை சிலர் திருடிச் சென்றனர்.

இதன்போது, அப்பகுதி இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து திருட்டில் ஈடுபட்ட இளைஞர் குழுவை மடக்கிப் பிடிக்க முயன்ற போது, அதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை சிக்கியுள்ளார்.

ஏனையவர்கள் தப்பியோடியுள்ளனர்.

மடக்கிப் பிடிக்கப்பட்ட இளைஞன் மக்களால் நையப்புடைக் கப்பட்டு கனகராயன்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள, கனகராயன்குளம் பொலிஸார், கைது செய்யப் பட்ட இளைஞனை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வர ஆலய திருப்பணி இந்தியா அக்கறை கொள்ளவேண்டும்

## இந்திய பிரதமருக்கு திருமுருகன் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

**இலங்கைக்கு வரும் இந்திய பிரதமர் திருக்கோணேஸ்வரர் திருத்தலத்தை தரிசிப்பதுடன், ஆலய திருப்பணி வேலைகள் தொடர்பில் இந்திய அரசு அக்கறை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவர் ஆறு. திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், அந்நியர் ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பட்ட திருக்கேதீஸ்வரர் தலத்தை இந்திய மத்திய அரசாங்கம் கடந்த காலத்தில் கருங்கல்லால் சிற்பக்கோவிலாக மாற்றி அமைத்தது. அதற்கு இலங்கை வாழ் இந்துக்கள் என்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள் ளனர்.

திருக்கேதீஸவரத் திருத்தலம் போல் மிகத் தொன்மைவாய்ந்த திருக்கோணேஸ்வர திருத்தல மும் முக்கியத்துவம் பெறுகி றது.

போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் இந்தப் பெருங்கோ வில் முற்றாக அழிக்கப்பட்டது.

தற்போது இந்த ஆலயம் சிறிய நிலப்பரப்பில் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் மீள்நிர்மாணம் பெற்றுள்ளது. முழுமையான கோவில் கட்டப்படவில்லை.

இந்திய அரசு இந்த ஆலயத்தை முழுமையாக நிர்மாணித்து காப்பாற்ற வேண்டும் என இந்துமக்கள் சார்பில் நன்றியோடு வேண்டு கிறோம்.

தங்கள் அமைச்சரவையில் உள்ள அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் திருக்கோ ணேஸ்வரத்துக்கு வருகைதந்து ஆலய நிர்வாக சபையுடனும் எம்மோடும் இந்த ஆலய எதிர் காலம் பற்றி கேட்டறிந்து கொண்டார்.

இந்திய தூதரகம் தொடர்ந்து திருக்கோணேஸ்வர திருப்பணி தொடர்பான விபரங்களை ஆராய்ந்துள்ளார்கள். ஆலய நிர்வாக சபையை அழைத்து பேசியுள்ளார்கள்.

தாங்கள் இலங்கை பயணத் தில் இத்தி ருத்தலம் தொடர் பாக உரிய அக்கறை எடுக்கு மாறு அன்பு டன் வேண்டு கிறோம் - என் றுள்ளது. (ஐ)

# வேலைக்காக வெளிநாடு செல்வோர் 1989ஐ அழைத்து உறுதிப்படுத்தலாம்

கொழும்பு, மார்ச் 17

வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்லவுள்ளவர் களுக்கு வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச் சர் விஜித ஹேரத் முக்கிய அறி விப்பை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, வேலை வாய்ப் புக்காக தனியார் முகவர்களின் ஊடாக வெளிநாடு செல்லும் போது 1989 என்ற தொலை பேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி குறித்த முகவர் தொடர்பில் அறிந்து கொள்ள முடியும் என்று அவர் தெரிவித் துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் அங்கீகரிக்கப் பட்ட முகவர் நிறுவனங்கள் மற்றும் கட்டணங்கள் தொடர் பான அனைத்து தகவல்களை யும் பணியகத்தின் இணையத ளத்தில் அறிந்துகொள்ள முடி யும் -என்றும் அவர் தெரிவித் தார். (ஐ)

# அநுராதபுரம் மருத்துவமனையின் பாதுகாப்பை ஆராய மூவர் குழு!

கொழும்பு, மார்ச் 17

அநுராதபுரம் போதனா மருத் துவமனை நிர்வாகத்தி னருக்கு உரிய பாதுகாப்பு மற்றும் வசதி களை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க சுகாதார அமைச்சின் செயலா ளர் அனில் ஜாசிங்க மூவர் குழு ஒன்றை அமைத்துள்ளார்.

இந்தக் குழுவின் தலைவராக வட மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத் துவர் எம். கே. சம்பத் இந்திக குமார செயற்படுகிறார். இந்தக் குழு தமது அறிக்கையை எதிர் வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட் டுள்ளது. (ஐ)

# இலங்கையின் தூதுக்குழு அமெரிக்கா செல்கிறது!

கொழும்பு, மார்ச் 17

2025 ஏப்ரல் 02 முதல் நடைமுறைக்கு வரும் வரிகள் குறித்து அமெரிக்க வர்த்தக பணிமனையுடன் கலந்துரையா டுவதற்காக இலங்கை தூதுக் குழு அடுத்த மாதம் அமெரிக்கா செல்லவுள்ளது என்று வெளி யுறவு அமைச்சர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித் தார்.

நேற்று முன்தினம் அவர் ஆற்றிய உரையில்,நாட்டின் பொருளாதார நிலைமை ஸ்திர மின்றி இருப்பதால், ஏற்றும திகள் மீதான இத்தகைய வரி களை இலங்கையால் தாங்க முடியாது.

நிதி அமைச்சகம், வெளியு றவு அமைச்சகம் மற்றும் வர்த் தக சமூகத்தின் பிரதிநிதிக ளுடன் அடுத்த மாதம் அமெ ரிக்காவில் உயர்மட்ட இலங்கை வர்த்தக சம்மேளனம் நடைபெறும்.

இந்தப் பயணத்தின் போது அமெரிக்க வர்த்தக அலுவலக உறுப்பினர்களுடனான கலந்து ரையாடல்களின் போது, வரிப் பிரச்னை குறித்து கலந்துரை யாடவும் நிவாரணம் பெறவும் இலங்கை நம்புவதாக அமைச்சர் ஹேரத் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத் தின் திட்டத்துக்குள் செயல் படும் இலங்கைக்கு அதிகரித்த கட்டணங்களை தாங்க முடியா ததால் வரிச் சலுகை கிடைக்கும் என்று அவர் நம்பிக்கை தெரி வித்தார்.

ஏப்ரல் 2 முதல் கனடா, மெக்ஸிகோ, சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட பல நாடு கள் மீது தனது நிர்வாகம் வரி களை விதிக்கும் என்று ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு, அமெரிக்கா இலங்கையிலிருந்து 300 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள பொருட்களை இறக்குமதி செய் தது. ஆடைத் துறையின் 70 வீதத்துக்கும் அதிகமான பொருட்கள் அமெரிக்காவுக்கு சென்றன.

இதனால் அந்த நாடு இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளிகளில் ஒன்றாக மாறியது. பரஸ்பர வரிகள் குறித்த ஜனாதிபதி ட்ரம்பின் அறிவிப்பைத் தொடர்ந்து, அதன் தாக்கத்தை நிவர்த்தி செய்ய இலங்கை அரசு முன் னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுத்து வருகிறது. (ஐ)

# பொறுப்புக்கூறும் செயன்முறைக்கு ஜே.வி.பி. அரசாங்கம் ஆதரவளிக்குமா?

## கஜேந்திரகுமார் எம். பி. கேள்வி

கொழும்பு, மார்ச் 17

நாட்டில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமாயின் உண் மைகள் ஆராயப்பட வேண் டும். அந்த நடவடிக்கை நம்ப கத்தன்மையானதாக இருக்க வேண்டும். மகிந்தவின் ஆட்சி யில் மக்கள் விடுதலை முன்னணி இராணுவ தீர்வை தீவிரமாக ஆதரித்தது.



அவ்வாறான நிலையில் உண்மையில் இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறும் செயன் முறைக்கு ஆதரவளிக்குமா? - என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இன மோதல்கள் தொடர்பில் வெளிவிவகாரத் துறை அமைச்சு முக்கிய பங்கு வகிக்கின்றது. அதாவது கடந்த காலங்களில் பயங்கரவாத எதிர்ப்பு உள்ளிட்ட நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன. அத்துடன், பல பொய் களும் பரப்பப்பட்டுள்ளன.

இந்த அரசாங்கம் வருவ தற்கு முன்னர் இந்த அமைச்சு இவ்வாறுதான் இருந்தது. தமிழ் மக்கள் உரிமைகளை கோரும் போது அது தொடர்பான போராட்டத்தை பயங்கரவாதம் என்று குறிப்பிட்டு இந்த அமைச்சின் ஊடாகவே பிரசாரங்கள் முன்னெடுக்கப் பட்டன.

தேசிய மக்கள் சக்தி தலை மையிலான அரசாங்கம் பதவி யேற்ற பின்னர் அந்த நடவ டிக்கைகளை மாற்றியுள்ளதா என்ற கேள்விகள் எழுகின்றன. இன மோதல்கள் தொடர்பாக இதன் அணுகுமுறை என்ன?

எவ்வாறு வெளியுறவு கொள்கைகளை பேணப் போகின்றது என்ற கேள்விகள் எழுகின்றன.

அத்துடன் தமிழ் மக்கள் மீதான கரிசனை தொடர் பில் சர்வதேச மத்தியில் எழும் விட யங்களுக்கு எவ்வாறு எதிர் வினையாற்ற போகிறது என்ப தனையும் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இந்த நாட்டில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமாயின் ன்ன நடந்தது என்று ஆராய வேண் டும். அந்த நடவடிக்கை நம்ப கத்தன்மையானதாக இருக்க வேண்டும். அது உள்நாட்டு பொறிமுறையாக இருக்க முடியாது - என்றார். (ஐ)

# உள்நாட்டு வருமான திருத்த சட்டம் 20ஆம் திகதி பாராளுமன்றில் விவாதம்



கொழும்பு, மார்ச் 17

உள்நாட்டு வருமான திருத்த சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர் வரும் வியாழக்கிழமை மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடத்துவதற்கு பாரா ளுமன்ற விவகாரம் தொடர் பான குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை வரவு - செலவு திட்டம் தொடர் பான குழுநிலை விவாதத்தின் பின்னர் இந்த விவாதம் நடை பெறவுள்ளது.

உள்நாட்டு வருமான திருத்த சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை மாலை 6.00 மணியின் நடத்து வதற்குச் சபாநாயகர் ஜகத் விக் கிரமரத்ன தலைமையிலான கூட்டத்தில் தீர்மானித்துள்ளது. பாராளுமன்ற விவகாரம் தொடர்பான குழுக் கூட்டத் தின்போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பாராளுமன் றின் செயலாளர் குஷானி ரோஹ ணதீர தெரிவித்துள்ளார். (ஐ)

# யாழ்ப்பாணத்தில் மலேரியா நோயாளி ஒருவர் அடையாளம்!

யாழ்ப்பாணம், மார்ச் 17

மலேரியா நோயால் பாதிக்கப்பட்டு இளைஞர் ஒருவர் யாழ். போதனா மருத் துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

இவ்வாறு சிகிச்சை பெறும் இளைஞர் ஐரோப்பிய நாட் டுக்கு செல்வதற்காக முகவர்க ளால் கடந்த ஆண்டு டிசெம்பர் 28ஆம் திகதி கொழும்பு, மும்பாய் நைரோபி வழியாக சியாரா லியோன் என்ற மத்திய ஆபிரிக்க நாட்டில் இறக்கி விடப்பட்டவர்.

அங்கு அவரின் பயணம் தடைப்பட்ட நிலையில் சுகவீ னமுற்று குடும்பத்தவர்களால் மீளவும் நாட்டுக்கு கடந்த 11ஆம் திகதி அழைத்து வரப் பட்டுள்ளார்.

இவரை பாதித்த மலேரியா கிருமி பிளாஸ்மோடியம் ஃ பல்சிபோறம் என்பதாகும். இலங்கையில் மலேரியா நோய் முற்றாக அழிக்கப்பட்ட மையால் மீண்டும் நுளம்பின் மூலம் பரவும் மலேரியா தொற்று பரவாது இருப்பதற்கு இவ்வாறு வெளிநாடு சென்று மீள்பவர்கள் விமான நிலையத் தில் உள்ள மருத்துவ அதிகாரி யையோ அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை யையோ அல்லது மருத்துவம னையையோ அணுகி உரிய மருந்துவ ஆலோசனை, தடுப்பு மருந்து பெறுவது அவசியம் - என்று யாழ். போதனா மருத் துவமனையின் பிரதி பணிப்பா ளர் சி. யமுனானந்தா தெரிவித் துள்ளார். (ஐ)

# செவ்வந்தி மாலைதீவுக்கு தப்பியிருக்கலாம்

கொழும்பு, மார்ச் 17

கணேமுல்லை சஞ்சீவ கொலைக்கு மூளையாக செயல் பட்டார் என்று கருதப்படும் சந்தேகநபரான இஷாரா செவ் வந்தி கடல் வழியாக மாலை தீவுக்குத் தப்பிச் சென்றிருக்க லாம் என சந்தேகம் வெளியிடப் பட் டுள்ளது.

பொலிஸார் தேடலை ஆரம் பிக்க முன், சக்திவாய்ந்த பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவ ரால் செவ்வந்தி மாலைத்தீவுக்கு அழைத்து செல்லப்பட்டார் என்று கூறப்படுகிறது.

மேலும், இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வெளிநாட் டில் இருக்கும் பாதாள உலகக் குழு உறுப்பினர் கையாண்டார் என்று'ம் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் உயிரிழந்த தமிழருக்கு நியாயம் கிடைக்க வேண்டும்!

## தயாசிறி எம். பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 17

**போரின்போது கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கும் ஏனைய இனத்தவர்களுக்கும் நியாயம் கிடைக்கச் செய்யும் வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயல்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், “கடந்த காலங்களைப் போன்று மனித உரிமைகள் மீறல் இடம்பெறாது என உறுதியளிப்பதற்கு மாறாக அதனைச் செயலில் காண்பிக்க வேண்டும்.

மனோரி முத்தெட்டுகம ஆணைக்குழு ஊடாக நாடளாவிய ரீதியில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இது தொடர்பில் கண்டறிவதற்கு முறையாக விசாரணைகள் அவசியமாகும். கொல்லப்பட்ட ஜே. வி. பியினர் தொடர்பில் மாத்திரம் அரசாங்கம் கருத்தில்கொள்ளாது இராணுவத்தால் கொல்லப்பட்ட தமிழர்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

இதேவேளை, மகிந்தவுடன் அரசாங்கத்திலிருந்தபோது பட்டலந்த ஆணைக்குழு தொடர்பில் வாய்திறக்காத ஜே. வி. பி இன்று அது பற்றிப் பேசுகிறது. அல் ஜசீராவால் வெளிப்படுத்தப்பட்டதன் பின்னரே அரசாங்கத்துக்கு பட்டலந்த ஆணைக்குழு நினைவுக்கு வந்துள்ளது. எனவே, நாட்டில் நடந்தேறிய இதுபோன்ற இன்னும் பல கொடூரங்கள் குறித்து அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# இந்த ஆண்டில் விபத்துகளில் இதுவரை 412 பேர் பலி!

கொழும்பு, மார்ச் 17

இந்த ஆண்டில் இடம் பெற்ற விபத்துகளில் 412 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.2025 மார்ச் 14ஆம் திகதி வரை நாட்டில் மொத்தம் 925 விபத்துகள் பதிவாகின. இந்த விபத்துகளில் 412 பேர் உயிரி ழந்தனர்.

இதனிடையே, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் அறிவுறுத்தலின் பேரில், ஒழுக்கமான சாரதிகளுக்கு வெகுமதி அளிக்கும் முறையைத் தொடங்குவதற்கான ஒரு முயற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பணம் பறிக்க முயன்றவர் கல்லால் அடித்துக் கொலை

கொழும்பு, மார்ச் 17

மாணவனின் பணத்தை பறிக்க முயன்றவர் கற்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்று கொழும்பு - கொஹூவல பொலிஸார் தெரிவித்தனர்.

கொஹூவல பிரதேசத்தில் மாணவன் ஒருவரின் பணத்தை ஒருவர் வழிப்பறி செய்தார். இதனை அவதானித்த குழு ஒன்று வழிப்பறியில் ஈடுபட்டவரை கற்களை வீசித் தாக்கியது.

இதையடுத்து, அந்த நபர் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தார். பின்னர் களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மனித உரிமைகள் விடயத்தில் உண்மையை வெளிப்படுத்துங்கள்

## ரவூப் ஹக்கீம் எம். பி.

கொழும்பு, மார்ச் 17



மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கமைய அனைத்து உண்மைகளும் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும் - என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம். பி. தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த மாதம் 25ஆம் திகதி இடம்பெற்றிருந்த 25ஆவது மனித உரிமைகள் பேரவையில் எமது வெளிவிவகார அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றி இருந்தார். கடந்த வருடம் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய பல விடயங்கள் அங்கு கையாளப்பட்டிருந்தன.

எனினும், கடந்த கால அரசாங்கங்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் பெருமளவில் வேறுபட்டிருக்கவில்லை. மனித உரிமைகள் தொடர்பில் பல விடயங்களை அமைச்சர் கூறி இருந்தார். அவற்றை நாங்கள் வரவேற்கிறோம்.

எமது நாடு பொருளாதார ஸ்திரதன்மையற்று இருக்கிறது. அதிலிருந்து மீள்வதற்கு தேவையான விடயங்களை செய்துவருகிறது என்பதை நாம்அறிவோம் தமிழ் பேசும் பொலிஸாரை இணைத்துக்கொள்ளல் போன்ற பல விடயங்களை தெரிவித்திருந்தீர்கள். ஆனால், இவை அனைத்தும் ஓர்அடையாளமாக மட்டுமே எமக்கு தெரிகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவகம், உண்மையை கண்டறியும் ஆணைக்குழு அதுதொடர்பான விடயங்களை அரசாங்கம் தெளிவாக தெரிவித்திருக்க வேண்டும். அதன் நடைமுறைகள் தொடர்பில் தெரிவித்திருக்க வேண்டும். பொறுப்புக்கூறும் விடயம் காலதாமதாமாகி இருக்கிறது. இது தொடர்பில் சர்வதேசம் எம்மை குற்றம் கூறியிருக்கிறது.

உண்மையை கண்டறிதல் எனும்போது முஸ்லிம்கள் பெரும்துன்பங்களுக்கு முகங்கொடுத்திருக்கிறார்கள். முஸ்லிம்கள, தமிழர்கள் சிங்களவர்கள் என அனைவரும் துன்பப்பட்டிருக்கிறார்கள். அதனால் நாங்கள் இதில் இருந்து வெளியில் வரவேண் டும். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கோரிக்கைக்கமைய அனைத்தும் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும் - என்றார்.

# துணை இராணுவக் குழுவை தென்னக்கோன் இயக்கினார்!

## நீதிமன்றில் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 17

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பொது நிதியை தவறாகப் பயன்படுத்தி தனியார் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க ஒரு துணை இராணுவக் குழுவை இயக்கினார் என்று சட்டமா அதிபரை பிரதிநிதித்துவப்படுத்தும் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரவித்துள்ளார்.

வெலிகம ஹோட்டல் துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக மாத்தறை நீதவான் அவரைக் கைது செய்ய உத்தரவிட்ட பிடியாணையை தடுக்கக் கோரி தென்னகோன் தாக்கல் செய்த எழுத்தாணை (ரிட்) மனு புதன்கிழமை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நீதிபதி முகமது லாஃபர், நீதிபதி சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பெப்ரவரி 27 முதல் அவரது குடும்பத்தினருடனும் சேர்ந்து காணாமல் போன இலங்கை காவல் துறையின் பொலிஸ் மா அதிபரை கண்டுபிடிக்க முடியாமல் போனமை குறித்து பீரிஸ் கவலை தெரிவித்தார். டிசெம்பர் 29, 2023 அன்று, தென்னக்கோன் வெலிகமவில் சோதனை நடத்த கொழும்பு குற்றப்பிரிவுக்கு (சி.சி.டி) தனிப்பட்ட முறையில் அறிவுறுத்தியதாக வெளிப்படுத்தினார்.

வெலிகம ஹோட்டல் துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்வதைத் தடுக்க இடைக்கால உத்தரவு பிறப்பிக்கலாமா என்பது குறித்து மார்ச் 17 ஆம் திகதி தீர்ப்பளிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் புதன்கிழமை நிர்ணயித்தது.

தென்னக்கோன் சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா, கைது உத்தரவு சட்ட விதிகளை மீறியும், தனது வாடிக்கையாளரிடமிருந்து முதலில் ஒரு வாக்குமூலத்தைப் பதிவு செய்யாமலும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வாதிட்டார்.

இருப்பினும், சட்டமா அதிபரை பிரதிநிதித்துவப்படுத்தும் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், வெலிகம ஹோட்டல் நடவடிக்கைக்குப் பின்னால் தென்னக்கோன் தான் மூளையாக செயல்பட்டார். இதனால் ஹோட்டல் உரிமையாளரை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றும் எதிர்த்தார்.

மாத்தறை நீதிவான் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான முக்கியமான உண்மைகளை தென்னக்கோன் வெளியிடத் தவறியமையை காரணம் காட்டி மனுவை தள்ளுபடி செய்யுமாறு நீதிமன்றத்தை வலியுறுத்தினார்.

விசாரணையின் போது, நீதிபதி லஃபர் மனுதாரரின் சட்டத்தரணியிடம் தனது வாடிக்கையாளரின் இருப்பிடம் குறித்தும், அவர் நீதிவான் முன் சரணடைவாரா என்பது குறித்தும் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த சட்டத்தரணிறொமேஷ் டி சில்வா, தனது வாடிக்கையாளருக்கு அவ்வாறு செய்ய எந்த சட்டபூர்வ கடமையும் இல்லை என்று கூறினார்.

# போதைப்பொருளுடன் 11 பேர் கைது

நுவரெலியா, மார்ச் 17

போதைப்பொருட்களுடன் சிவனொளிபாத மலைக்கு சென்ற 11 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சிவனொளிபாத மலைக்கு போதைப் பொருட்களுடன் வந்த 11 பேரை கடந்த சனிக்கிழமை நல்லதண்ணி பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். நாளை செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முற்படுமாறு உத்தரவிட்டு நீதிவான் சந்தேகநபர்களை நீதிவான் பிணையில் விடுவித்தார்.

சந்தேக நபர்கள் 25 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# முதியோருக்கான கொடுப்பனவு வியாழன் முதல்!

கொழும்பு, மார்ச் 17

அஸ்வெசும நிதியுதவி பெறாத குடும்பங்களின் முதியவர்களுக்கு மட்டும் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் தபால் மற்றும் உப தபால் அலுவலகங்கள் மூலம் 3 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்க பரிந்துரைக்கப்பட் டுள்ளது.

அஸ்வெசும பெறும் குடும்பங்களில் உள்ள 70 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கான கொடுப்பனவு அஸ்வசும கொடுப்பனவுடன் சேர்த்து வழங்கப்படுகிறது என்பது - குறிப்பிடத்தக்கது. (ஐ)

- பாராளுமன்ற உணவகத்தில் -

# உணவருந்தும் எம். பிக்களின் எண்ணிக்கை குறைவடைந்தது

கொழும்பு, மார்ச் 17

பாராளுமன்றில் உணவின் விலையை 2 ஆயிரம் ரூபாயாக அதிகரித்தமையைத் தொடர்ந்து அங்கு உணவருந்தும் எம். பிக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பாராளுமன்ற உணவகத்தில் ஓர் உறுப்பினருக்கான தினசரி உணவு கொடுப்பனவு ஆரம்பத்தில் 450 ரூபாயாக இருந்தது. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், அந்தத் தொகை 2 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.

இந்த விலையுயர்வால், கொழும்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வீட்டிலிருந்து உணவு எடுத்து வருகிறார்கள் அல்லது மதிய உணவுக்காக வீடு செல்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

மேலும், சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தேநீருடன் சிற்றுண்டியை மட்டுமே அருந்துகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம், பாலியல் குற்றங்களில் இராணுவம் ஈடுபடவில்லையாம்

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்



கொழும்பு, மார்ச் 17

**இராணுவத்தில் ஒரு சிலர் ஏதேனும் குற்றச்செயல்களில் ஈடு பட்டிருக்கலாம். இதனை முழு இராணுவத்தினர்மீதும் தொடர்பு படுத்தி படையினர் யுத்தக் குற்றங்களிலும், பாலியல் வன்புணர்வு களிலும் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டுவதை ஏற்க முடியாது - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் பாரா ளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ராஜபக்ஷக்களை ரணில் விக்கிரமசிங்கவே பாது காத்தார் என்று பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குறிப்பிட்டிருந்தார். எங்களுக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க செயல்பட்டார்.

அதிகளவில் வழக்குகளை தாக்கல் செய்தார். நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் ஒழிப்பு அலுவலகத்தின் செயலாளராக பதவி வகித்த ஆனந்த விஜய பால தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக செயல்படுகிறார். நீங்களே அந்த வழக்குகளை தாக்கல் செய்தீர்கள். அவற்றில் நாங்கள் நீதிமன்றத்தால் நாங்கள் விடு தலை செய்யப்பட்டுள்ளோம்.

கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் இறை யாண்மைக்கு எதிராக செயல் பட்டார். ஆனால், தற்போது சர்வதேச ஊடகங்களில் அவர் நாட்டை காட்டிக்கொடுக்கா தது தொடர்பில் மகிழ்ச்சிய டைகின்றோம்.

எமது அரசியல் மாற்றங்கள் என்பது வேறு விடயமாகும். நம்மிடையே நட்புறவுகள் உள்ளன. 2005இல் ஒரே மேடையில் இருந்தோம். 2015 இல் நீங்களும் ரணிலும் ஒரே மேடையில் இருந்தீர்கள்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் 2005இல் உடன்படிக்கை கைச்சாத்திடும் போது குறித்த அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் என்று கூறவில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் அமைச் சரவையிலும் இருந்தீர்கள். அப் போதும் பட்டலந்த அறிக்கை தொடர்பில் பேசவில்லை. ஆனால், இப்போது சர்வதேச ஊடகம் கேட்டதும் அந்த அறிக்கையை பாராளுமன்றத் தில் சமர்ப்பித்துள்ளீர்கள்.

நாங்கள் நாட்டை பாது காக்க வேண்டும். நாட்டின் முன்னாள் தலைவர் ஒருவர் வெளிநாட்டுக்கு சென்று எமது இராணுவத்தினர் யுத்தக் குற்றத் தில் ஈடுபட்டனர் என்பதனை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு சென்றால் மகிந்த ராஜபக்ஷவுக்கோ, ரணில் விக் கிரமசிங்கவுக்கோ பாதகமாக அமையாது. முழுநாடும் நெருக்கடிக்குள்ளாக நேரிடும்.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், இராணுவத்தி னர்மீது கடுமையான குற்றச் சாட்டுகளை முன்வைக்கிறார். இராணுவத்தினர் யுத்தக் குற்றத்தில் ஈடுபட்டனர் என் பது மட்டுமின்றி பாலியல் வன் கொடுமைகளிலும் ஈடுபட்ட னர் என்றும் கூறுகிறார். ஏதே னும், சம்பவமொன்று முன் னாள் இராணுவ சிப்பாயால் நடந்திருக்கலாம்.

இங்கே சாணக்கியன் முன் வைத்த குற்றச்சாட்டுகள் காலத் துக்கு பொருத்தமானதல்ல. இராணுவத்தினர் அன்று யுத்தம் செய்தனர்.

அதன்போது ஏதே னும் சம்பவம் இடம்பெற்றிருந் தால் அது தொடர்பில் விசா ரணை செய்வதல்ல பிரச்னை இதனை அரசியல் விடயமாக மாற்றி பல வருடங்களுக்கு பேச லாம். இதனூடாக இந்த சமூ கத்தில் வெறுப்புணர்வு உருவா வதை நிறுத்த முடியாது. வெறுப்பு ணர்வற்ற அரசியலை இங்கே கட்டியெழுப்ப வேண்டுமா யின் அரசு என்ற விடயத் தில் நாம் எல்லோரும் ஒரே நிலைப் பாட்டில் இருக்க வேண்டும் - என்றார். (ஐ)

# ரணில், சஜித் இணையாத வரை இந்த நாட்டுக்கு விடிவு இல்லை

## சொல்கிறார் நவீன் திஸநாயக்க

கொழும்பு, மார்ச் 17

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங் கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் இணையும் வரை இந்த நாட் டுக்கு விடிவு இல்லை. இந்த இரு கட்சிகளினதும் பிளவால் கட்சி ஆதரவாளர்களுக்கே அநீதி இழைக்கப்படுகிறது என்று நவீன் திஸநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஐக்கிய தேசிய கட் சியும் ஐக்கிய மக்கள் சக் தியும் சகோதர கட்சிகளாகும். இரு கட்சிகளும் ஒரே கொள்கை யையும் வேலைத்திட்டங்க ளையும் கொண்டவை. இரு கட்சிகளும் ஒரே பொருளாதார கொள்கைகளை நம்புபவை யாகும். அவ்வாறிருந்தும் இவ்விரு கட்சிகளும் தனித்து செயல்படுகின்றமை கவலைக் குரியதாகும். கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் இணைந்து களமிறங்கியிருந்தால் இன்று இருவரும் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் பதவி வகித் திருப்பர்.

இரு கட்சிகளுக்கிடை யிலான பேச்சுகளை நிறைவு செய்வதற்கு இன்னும் சிறிது கால அவகாசம் தேவை. எனது தந்தை காமினி திஸநாயக்க மற்றும் ரணசிங்க பிரேமதாஸ வுக்கு இடையில் பிரச்னைகள் ஏற்பட்டன.

எவ்வாறிருப்பினும் மீண்டும் எனது தந்தை பிரேம தாஸவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து கட்சியின் பிரதி தலைவராக நியமனம் பெற்றார். அவருக்கு அவ்வாறு செய்ய முடியும் என்றால் ஏன் எம்மால் முடியாது?

ஐ. தே. கவினருக்கு இதனால் பெரும் அநீதி இழைக்கப்படு கிறது. ரணில் - சஜித் என்றா வது ஒருநாள் பேச்சு நடத்தி இணை யும் வரை இந்த நாட்டுக்கு எழுச்சி இருக்காது - என்றார். (ஐ)



ஜெயசிறீ மகா போதி முன்பாக பஹான் பூசை நடைபெற்ற போது ஆர்வத்துடன் தீபம் ஏற்றும் மக்கள்...!

# ஊழியருக்கு ஒருநாள் சம்பளமாக 383,000 ரூபாய் வழங்கிய ரணில்!

கொழும்பு, மார்ச் 17

முன்னாள் ஜனாதிபதி தனது பிரித்தானிய பயணத்தின்போது பணியாளர் ஒருவருக்கு ஒருநாள் ஊதியமாக ஆயிரம் பவுண்ஸ் ( சுமார் 3 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய்) வழங்கியுள்ளார் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 2023 செப்ரெம்பர் 22, 23 ஆம் திகதி களில் தனிப்பட்ட பயணம் மேற்கொண்டார்.

இந்தப் பய ணத்தில் ரணில் விக்கிர சிங்க வின் மனைவி, சேனாரத்ன திஸநாயக்க, சாண்ட்ரா பெரேரா, ஒரு மருத்துவர், பாதுகாப்பு பணியாளர்கள் என 10 பேர் கொண்ட குழு லண்டன் சென்றது.

இந்தப் பயணத்துக்கான நிதி மிக அவசரமான - கண்டிப்பாக இரகசியமான என்ற விதியின் கீழ் கோரப்பட்டது. இந்தப் பயணத்துக்கு 40 ஆயிரம் பவுண்ஸ்களாக (ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய்) உயர்ந் தது.

ரணில் விக்கிரமசிங்கவின் பணியாளருக்கு 2 ஆயிரம் பவுண்ஸ்கள் ஊதியமாக வழங்கப்பட்டன. இது தொடர் பில் விசாரணை வேண்டும் - என்றார்.

இதேவேளை, முன் னாள் ஜனாதிபதி தனது பதவிக் காலத்தில் இலங்கை எதிர் கொண்ட நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, தனது செயல்களுக்காக வெட்கப்பட வேண்டும் - என்றும் ரத்நாயக்க சொன்னார். (ஐ)

# போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைதானார்

கொழும்பு, மார்ச் 17

முச்சக்கர வண்டி யொன்றில் போதைப் பொருட்களை கொண்டு சென்றவரை அநுராதபுரம் குற்றத்தடுப்பு பிரிவு பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய நடத்திய சுற்றி வளைப்பிலேயே சந்தே கநபர் கைது செய்யப் பட்டார். இதன்போது, 101 கிராம் 20 மில்லி கிராம் ஹெரோயின் சந்தேகந பரிடமிருந்து கைப்பற் றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் 41 வயதுடைய அநுராதபு ரம், திசாவெவ பகுதியை சேர்ந்த வராவார். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராத புரம் நீதிமன்றத்தில் முற்படுத் தப் படவுள்ளார். (ஐ)

# விமான பணிப்பெண்களுக்கு தொல்லை கொடுத்தவர் கைது

கொழும்பு, மார்ச் 17

சிங்கப்பூரிலிருந்து கட்டு நாயக்க பண்டாரநாயக்க சர்வ தேச விமான நிலையத்துக்கு வந்து கொண்டிருந்த விமானத் தில் இரு விமான பணிப்பெண் களுக்கு பாலியல் தொல்லை கொடுத்தவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர் அத்துருகிரி யவை சேர்ந்த 38 வயுது நபரா வார். சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

சனிக்கிழமை இரவு சிங்கப் பூரிலிருந்து சிறீ லங்கன் எயார் லைன்ஸ் விமானம் கட்டுநாயக் காவை நோக்கி வந்து கொண் டிருந்தது.

விமானம் பறந்து கொண்டி ருந்தபோது மது போதையில் இருந்த குறித்த நபர் இரு விமான பணிப்பெண்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

இது தொடர்பில் விமான பணிப்பெண்கள் விமானிக்கு தெரிவித்தனர். இது தொடர் பில் விமானி கட்டுப்பாட்டு நிலையத்துக்கு தகவல் அளித் தார். விமானம் விமான நிலை யத்தை வந்தடைந்ததும் சந்தேக நபர் பாதுகாப்பு அதிகாரிக ளால் கைது செய்யப்பட்டு கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக இரு விமான பணிப்பெண்களிட மிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# கிராண்ட்பாஸ் இரட்டை கொலை இரு சந்தேகநபர்கள் அடையாளம்!

கொழும்பு, மார்ச் 17

கொழும்பு - கிராண்ட்பாஸில் சகோதரர்கள் இருவர் கொல் லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் அடையாளம் காணப் பட்டுள்ளனர். அவர்களைக் கைது செய்வ தற்கான நடவடிக்கை கள் முன் னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட பகை காரண மாக வெள்ளிக்கிழமை அதி காலை இந்த இரட்டைக் கொலை இடம்பெற்றது. இதில், பாலத்துறையை சேர்ந்த 21, 22 வயது இளைஞர்களே கொல் லப்பட்டனர் என்பது குறிப்பி டத்தக்கது. (ஐ)

# பட்டலந்த அறிக்கை தொடர்பில் ஏப். 10 பாராளுமன்றில் விவாதம்!

கொழும்பு, மார்ச் 17

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மீதான பாராளுமன்ற விவாதம் எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பாராளுமன்ற அலு வல்கள் பிரிவு தெரிவித்துள் ளது. இந்த விவாதம் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள் ளது. ஏப்ரல் 10 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் நிலையியற் கட்டளைகள் 22 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பாராளுமன்ற அலுவல்களுக் காக ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10.00 மணி முதல் 11.00 மணி வரை வாய்மொழி பதில் தேவைப்படும் கேள்விக ளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், முற்பகல் 11.00 மணி முதல் 11.30 மணி வரை நிலை யியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விகளுக்கு ஒதுக்கப்பட் டுள்ளது. பட்டலந்த ஆணைக்கு ழுவின் அறிக்கை அமைச்சர் பிமல் ரத்நாயக்காவால் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன் றில் சமர்ப்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ச்சங்கத்துக்கு புதிய செயல்குழு

திருகோணமலை, மார்ச்.17

திருகோணமலை தமிழ்ச் சங்கத்துக்கான புதிய செயல்குழு திருகோணமலை பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவு செய்யப்பட்டது.

கடந்த பத்து ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த திருகோணமலை தமிழ்ச் சங்கம் கேணிப்பித்தன் (அருளானந்தம்) மூலம் மீள உயிர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தலைவராக திருமலை நவம், செயலாளராக சி. காண்டீபன், பொருளாளராக மு. முகைஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதன்போது, தமிழ்ச் சங்கத்தின் இளைஞர் அணியும் உருவாக்கப்பட்டது. (எ)

## கல்லடி பாலம் அருகில் விபத்து மௌலவி பலி! ஒருவர் காயம்

மட்டக்களப்பு, மார்ச்.17

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பஸ் - மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் மௌலவி ஒருவர் உயிரிழந்ததுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 07.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான காத்தான்குடி முகைதீன் பள்ளிவாசல் மௌலவி எம். எஸ். எம். ஸபீர் என்பவரே உயிரிழந்தார்.

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பய ணித்த இ. போ. ச. பஸ் - மோட்டார் சைக்கிளுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றது. இதன்போது, மோட்டார் சைக்கிளில் பின்பகுதியிலிருந்து பயணித்த மௌலவி உயிரிழந்தது டன், மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் காயங்களுடன் மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளார்.பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

உள்ளூராட்சி சபைகளை வெல்ல வைத்தால்

# தேசிய பட்டியல் எம். பி. பதவி சுழற்சி முறையில் கிடைக்கும்

ஏறாவூர், மார்ச்.17

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சபைகளை வெல்ல வைப்பவர்களுக்குசிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பட்டி யல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி சுழற்சி முறையில் வழங் கப்படும் என்று அந்தக் கட்சியின் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர் அறிவித்துள்ளார்.**

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். நளீம் தனது பதவியை இராஜினாமா செய்தது முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் சரித்திரத்தில் மாத்திரமல்ல இலங்கை முஸ்லிம் அரசியல் சரித்திரத்திலும் ஒரு தாக்கத்தை உருவாக்கிய நிகழ்வாகும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

மேலும், வெற்றிடமான பாராளுமன்ற உறுப்பினர் பதவி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடியும் வரை எவருக்கும் வழங்கப்பட மாட்டாது. மாறாக இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முக்கியமாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தங்களது பிரதேசத்துக்கு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தங்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி தமது சபைகளை கைப்பற்றி ஆட்சி அமைக்க வேண்டும். இதற்கான சகல எற்பாடுகளையும் செய்து பணியாற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

இந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவி சுழற்சி முறையில் ஒரு வருடத்துக்கு ஒருவர் என்ற முறையில் பகிர்ந்தளிக்கப்படும். இதனை கட்சி தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் தவிசாளர்கள்,

உயர்பீட உறுப்பினர் கள் தங்களது சபைகளை வெல்ல வைத்தால் கட்சி உங்க ளுக்கு பாராளுமன்ற உறுப்பி னர் பதவியைத் தந்து உங்களை யும் உங்களது பிரதேசத்தையும் கௌரவப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார். (எ)

## மகளிர் மற்றும் சிறுவர் பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு

திருகோணமலை, மார்ச்.17

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள், சிறுவர் அபிவிருத்தி பிரிவுகளில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வை திருகோணமலையில் இயங்கி வரும் ஈவின்ங்ஸ் பெண்களுக்கான சுதந்திர அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இதில், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 07 பொலிஸ் நிலையங்களில் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இதன்போது, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது. இந்தச் செயலமர்வுக்கு வளவாளராக மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தீபானி கலந்து சிறப்பித்தார். பெண்கள், சிறுவர்கள் உரிமைகள், பாலியல் வன்முறைச் சம்பவங்களின் போதான நிலமையின் போது செயல்படும் விதம், சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இந்தச் செயலமர்வின் போது கலந்துரையாடப்பட்டன.

இதில், ஈவின்ங்ஸ் பெண்களுக்கான சுதந்திர அமைப்பின் தலைவி திருமதி காயத்திரி நளினகாந்தன், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)


## மூதூரில் வறிய குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கல்




மூதூர், மார்ச்.17

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு வறிய குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை, மூதூர் விவாகப் பதிவு காரியா லயத்தில் நடைபெற்றது. (எ)

## அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் பெரும்போக அறுவடை ஆரம்பம்



கல்முனை, மார்ச்.17

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மை அறுவடைப் பணிகள் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த திடீர் மழை காரணமாக பெரும்போக அறுவடை தடைப்பட்டிருந்தது. எனினும், தற்போது கால நிலை சீரானதால் பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, நிந்தவூர், அம்பாறை, இறக்காமம், மத்திய முகாம் ஆகிய இடங்களில் அறுவடை இயந்திரங்கள் மூலமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், விளைச்சல் கடந்த போகங்களை விட திடீர் மழை வீழ்ச்சி காரணமாக குறைவடைந்த போதிலும் நெல்லுக்கான கேள்வி அதி உச்சத்தில் காணப்படுகின்றது. இது தவிர தாம் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கடன் பட்டு வேளாண்மை மேற்கொண்ட போதிலும் தமது மழையால் பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் அறுவடை செய்யப்படும் நெல்லை கொள்வனவு செய்வதில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர்களை விட வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகளும், அரிசி ஆலை உரிமையாளர்களுமே அதிகளவில் அக்கறை காட்டி வருகின்றனர் எனவும் விவசாயிகள் கூறினர். (எ-01)

# இல்மனைற் அகழும் பணி தற்காலிகமாக நிறுத்தம்!

### தேர்தல் முடிந்த பின்னர் இறுதி முடிவு

திருக்கோவில், மார்ச்.17

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வதற்கு எடுத்த முயற்சிகள் பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக, அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரமவின் உத்தரவையடுத்து நேற்று முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் குறித்த பகுதிக்குச் சென்று அரச அதிபரின் உத்தரவு அறிவித்தலை அதிகாரிகளிடம் காண்பித்து அகழ்வுப் பணியை தற்காலிகமாக நிறுத்தியுள்ளார்.இதேவேளை, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் கவீந்திரன் கோடீஸ்வர னும் குறித்த இடத்துக்கு சமுகமளித்திருந்தார்.

தாண்டியடி பகுதியில் புவிச்சரிதவியல் அதிகாரி மற்றும் தன்சிலா கம்பனியின் உத்தியோகத்தர் ஆகியோருடன் பாராளுமன்ற உறுப்பினர் பிரதேச செயலாளர் மற்றும் பொதுமக்கள் கலந்துரையாடினர்.இறுதியில், தற்போது இவ் அகழும் பணியை அரச அதிப ரின் உத்தரவையடுத்து தற்காலி கமாக நிறுத்துவது என்றும், உள்ளூராட்சி தேர்தல் முடிந்த பிறகு பிரதேச செயலகத்தில் இரு சாராரும் சமுகமளிக்கும் பொதுக் கூட்டத்தில் இப் பணியை தொடர்ந்து மேற் கொள்வதா? முற்றாக இடை நிறுத்துவதா? என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று முடிவு எட்டப்பட்டது.

அதனையடுத்து இரு சாராரும் கலைந்து சென்றனர். இருந்தும் குறித்த இயந்திரம் அகற்றப் பட வேண்டும் என்று பொது மக்கள் கேட்டுக் கொண் டனர். இல்லாவிட்டால் அலுவ லகம் முன்னால் போராட்டத் தில் ஈடுபடுவோம் என்று மக்கள் தெரிவித்தனர்.இதேவேளை, இல்மனைற் அகழ்வுக்கு பொறுப்பான தன் சிலா எக்ஸ்போர்ட் கம்பனி நிர்வாகிகளும் ஊழியர்களும் தமது



அலுவலகம் அமைந்துள்ள சங்குமண் கிராமம் உமிரி எனும் கிராமத்தில் குறித்த இல்மனைற் அகழும் இயந்திரத்தை நிறுத்தி வைத்துள்ளனர். (எ-07)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம் அமுலானால் மட்டுமே இஸ்ரேல் பணயக்கைதிகள் விடுதலை

## ஹமாஸ் அமைப்பு திட்டவட்டம்

காஸா, மார்ச்.17

**காஸாவில் மீண்டும் போர் நிறுத்தத்தை அமுல்படுத்தினால் மட்டுமே இஸ்ரேல், அமெரிக்க பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று ஹமாஸ் அமைப்பு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான முதற்கட்ட போர் நிறுத்தம் முடிவுக்கு வந்து 2 வாரங்களாகும் நிலையில், போர் நிறுத்தத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து கட்டாரின் டோஹா நகரில் பேச்சுக்கள் நடைபெற்று வருகிறது. இந்தப் பேச்சுக்களில் பணயக் கைதியாக பிடித்து வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க வம்சாவளியைச் சேர்ந்த இஸ்ரேலிய இராணுவ வீரர் எடான் அலெக்சாண்டர் என்பவரை விடுதலை செய்யவும், பணயக் கைதியாக பிடித்து செல்லப்பட்டு பின்னர் உயிரிழந்த 4 வெளிநாட்டு பணயக் கைதிகளின் உடல்களை ஒப்படைக்கவும் ஹமாஸிடம் கோரப்பட்டது.

அதை ஹமாஸும் ஏற்றுக் கொண்டது.

இந்த நிலையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் செயல்படுத்தினால் மட்டுமே அமெரிக்க பணயக் கைதியையும், 4 வெளிநாட்டு பணயக் கைதிகளின் உடல்களையும் ஒப்படைப்போம் என்று ஹமாஸ் அமைப்பு நேற்று தெரிவித்துள்ளது.

அதுமட்டு மின்றி விடுவிக்கப்படும் பண யக் கைதிகளுக்கு ஈடாக இஸ் ரேல் அதிக எண்ணிக்கையி லான பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் ஹமாஸ் அமைப்பு வலியுறுத் தியுள்ளது. (எ)

# அமெரிக்காவில் சூறாவளி 26 பேர் உயிரிழந்தனர்!

## 2 இலட்சம் வீடுகளுக்கு மின் துண்டிப்பு



வாஷிங்டன், மார்ச்.17

அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் ஏற்பட்ட சூறாவளி பாதிப்புக்கு இதுவரை 26 பேர் வரை பலியாகினர்.

ஒருபுறம் காட்டுத்தீ பரவுகிறது. மறுபுறம் புழுதி புயல் மற்றும் பனி பாதிப்புகளும் மக்களை இன்னலில் தள்ளியுள்ளன.

அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியாக மிசவுரி உள்ளது. இங்கு சூறாவளி பாதிப்புக்கு 12 பேர் பலியாகினர். இதனால், பல்வேறு மாகாணங்களில் பாடசாலைகள் முற்றிலும் சேதமடைந்து விட்டன. கார்கள், கனரக வாகனங்கள் வீதிகளில் கவிழ்ந்து கிடக்கின்றன. மரங்கள் வேரோடு சாய்ந்தன. வீடுகளும் இடிந்து விழுந்தன. சுவர்கள் மீது மக்கள் நடந்து செல்லும் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.அமெரிக்காவில் சூறாவளியால் பலத்த காற்று வீசி வருவதுடன், கடுமையான புழுதி புயலும் வீசி பாதிப்புகளை அதிகரித்து வருகிறது. நாடு முழுவதும் 100இற்கும் மேற்பட்ட காட்டுத்தீ சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன. வானிலை பாதிப்புகளால் 10 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கனடா எல்லையிலிருந்து டெக்சாஸ் நோக்கி மணிக்கு 130 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், குளிரான பகுதிகளில் குளிர் காற்றும், வெப்ப பகுதிகளில் காட்டுத்தீ ஏற்படும் ஆபத்தும் காணப்படுகின்றது.

டெக்சாஸ், ஒக்லஹோமா, அர்கான்சாஸ், மிசவுரி, இல்லினாய்ஸ், இன்டியானா மற்றும் மிச்சிகன் மாகாணங்களில் பலத்த காற்றால் 2 இலட்சம் வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் ஈராக்கில் படுகொலை

வாஷிங்டன், மார்ச்.17

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபு கதீஜா படுகொலை செய்யப்பட்டார் என்று ஈராக் பிரதமர் முகமது ஷியா அல்-சூடானி உறுதி செய்துள்ளார்.

இது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவரான அபு கதீஜா படுகொலை செய்யப்பட்டார். நம்முடைய துணிச்சலான போர் வீரர்கள் தயக்கமின்றி அவரை வேட்டையாடியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் மற்றொரு உறுப்பினரும் கொல்லப்பட்டார்.

வலிமையின் வழியே கிடைத்த அமைதி என ட்ரம்ப் இதனை குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவுடன் சேர்ந்து ஈராக் மற்றும் குர்திஷ் படைகள் ஒருங்கிணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் ஒரு பகுதியாக அபு கொல்லப் பட்டார்.

அப்துல்லா மகி முஸ்லே அல்-ரிபாய் என்ற அபு கதீஜா படுகொலை செய்யப்பட்ட பிற விவரங்களை ஈராக் பிரதமர் முகமது ஷியா அல்-சூடானியும் உறுதி செய்துள்ளார்.

ஈராக் மற்றும் உலகம் முழுவதும் செயல்பட்டு வரும் ஆபத்து நிறைந்த பயங்கரவாதிகளில் முக்கிய நபராக அபு திகழ்ந்தார். (எ)

# ரஷ்யா - உக்ரைன் பரஸ்பரம் தாக்குதல்

மொஸ்கோ, மார்ச்.17

போர் நிறுத்த பேச்சுக்களுக்கு இடையே உக்ரைன் - ரஷ்யா பரஸ்பரம் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளன. ரஷ்யாவின் வோல்கொகர்ட், வரோன்சி, பெல்ஹொரொட், ரோஸ்டவ், கர்ஸ்க் உள்ளிட்ட பிராந்தியங்களை குறிவைத்து நேற்று முன்தினம் உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியது. 126 ட்ரோன்கள் ஏவப்பட்ட நிலையில் இவை அனைத்தும் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதேவேளை, உக்ரைனின் பல்வேறு பிராந்தியங்களை குறிவைத்து ரஷ்யா ட்ரோன் தாக்குதல் நடத்தியது. 178 ட்ரோன்கள் ஏவப்பட்ட நிலையில் இவற்றில் பெரும்பாலானவை நடுவனில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. (எ)

# மேம்பாலம் இடிந்து விபத்து தாய்லாந்தில் ஐவர் மரணம்

பாங்கொக், மார்ச்.17

தாய்லாந்தில் மேம்பாலம் இடிந்து வீழ்ந்த விபத்தில் சிக்கி ஐவர் உயிரிழந்தனர். இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

தலைநகர் பாங்கொக் நெடுஞ்சாலை மிகவும் பரபரப்பானது. எனவே, போக்குவரத்து நெரிசலை சமாளிக்க அங்கு புதிதாக மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. இதன்படி, குறித்த மேம்பால கட்டுமானப் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது, திடீரென பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

இந்த விபத்தில் 5 பேர் உடல் நசுங்கி பலியாகினர். மேலும், 24 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. (எ)

### உக்ரைனில் போர் நிறுத்தம்

# புடினுக்கு உலகத் தலைவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்

லண்டன், மார்ச்.17



போர் நிறுத்தம் தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு உலகத் தலைவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இங்கிலாந்து பிரதமர் கெயர் ஸ்டார்மர் வலியுறுத்தியுள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் சுமார் 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை செய்து வருகின்றன. அதே சமயம், ரஷ்யாவுக்கு வடகொரியா உதவி வருகிறது.

இதற்கிடையில், உக்ரைன் - ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டு வருவதில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தீவிரம் காட்டி வருகிறார். சமீபத்தில் சவுதி அரேபியாவில் அமெரிக்கா மற்றும் உக்ரைன் பிரதிநிதிகள் நடத்திய பேச்சுக்களில், 30 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தம் கொண்டு வரும் முடிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.மேலும், உக்ரைனின் போர் நிறுத்த திட்டம் குறித்து கருத்து தெரிவித்த ரஷ்ய ஜனாதிபதி புடின், போர் நிறுத்தம் குறித்து விவாதிக்க ரஷ்யா தயாராகவுள்ளது என்றும், ஆனால், போர் நிறுத்தத்தின் விதிமுறைகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இந்த நிலையில், உக்ரைனில் போர் நிறுத்தம் கொண்டுவர புடினுக்கு உலக நாடுகளின் தலைவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இங்கிலாந்து பிரதமர் கெயர் ஸ்டார்மர் வலியுறுத்தியுள்ளார். மேலும், புடின் விரைவில் பேச்சுக்கு வருவார் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.(எ)

# 8 வயது சிறுமி வன்புணர்வு!

## குற்றவாளியின் வீடு தீக்கிரை

டாக்கா, மார்ச்.17

பங்களாதேஷில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 8 வயது சிறுமி உயிரிழந்ததை தொடர்ந்து கடும் சீற்றமடைந்த மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இம்மாதம் 5 ஆம் திகதி மகுராவில் உள்ள தனது மூத்த சகோதரியின் வீட்டுக்குச் சென்ற சிறுமி பாலியல் வன்முறைக்குள்ளாகினார்.

இது தொடர்பில் சகோதரியின் கணவரான 18 வயது நபரையும் அவரது குடும்பத்தவர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் குறித்த சிறுமி உயிரிழந்தார். இதனால், ஆத்திரமடைந்த பொதுமக்கள் சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட வீட்டுக்குள் நுழைந்து வீட்டை தீயிட்டு கொளுத்தினர்.(எ)

# வர்த்தக விரிவாக்கத்தில் முன்னணியில் இந்தியா

நியூயோர்க், மார்ச்.17

உலகம் முழுவதும் வளர்ச்சியடைந்த நாடுகள் வர்த்தகத்தில் சுருக்கம் கண்ட நிலையில், சராசரி வர்த்தக விரிவாக்கத்துக்கும் கூடுதலாக வளர்ந்து வரும் நாடுகளான, குறிப்பிடும்படியாக சீனா மற்றும் இந்தியா முன்னணியில் உள்ளது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

உலகளவில் சரக்கு மற்றும் சேவை வர்த்தகம், ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றின் அடிப்படையில், நாடுகளின் வர்த்தகம் சார்ந்த வளர்ச்சி நிலை கணக்கில் கொள்ளப்படுகின்றன. அந்த அடிப்படையில் பார்க்கும்போது, 2024ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் வர்த்தகத்தில் முன்னணி வகிக்கின்றன.இதுபற்றி ஐ. நாவின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி அமைப்பில், மார்ச் தொடக்கம் வரையிலான தரவுகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகளாவிய வர்த்தகம் 2024ஆம் ஆண்டில் 1.2 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில் விரிவாக்கம் கண்டுள்ளது. இது ஒட்டுமொத்தத்தில் 33 ட்ரில்லியன் அமெரிக்க டொலராகவுள்ளது.

இதன் முடிவில், சேவை வர்த்தகம் 9 சதவீதம் அளவுக்கும், சரக்கு வர்த்தகம் 2 சதவீதம் அளவுக்கும் வளர்ச்சியடைந்துள்ளது என அந்த அறிக்கையில் கூறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனானது மும்பை அணி போராடி தோற்றது டில்லி அணி



மும்பை, மார்ச்.17

8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி 2ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றி அசத்தியது.

3ஆவது மகளிர் பிரீமியர் லீக் தொடர் கடந்த மாதம் 14ஆம் திகதி தொடங்கியது. இதன் லீக் சுற்று முடிவில் டில்லி கப்பிட்டல்ஸ், மும்பை இந்தியன்ஸ் தலா 10 புள்ளி பெற்றாலும் ஓட்ட எண்ணிக்கை அடிப்படையில் முதலிடத்தை பிடித்த டில்லி அணி நேரடியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. குஜராத் ஜெயண்ட்ஸ் 3ஆவது இடம் பிடித்தது.

உ.பி.வாரியர்ஸ், பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் லீக் சுற்றுடன் வெளியேறின. இதில், வெளியேற்றுதல் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் ஜெயண்ட்ஸை வீழ்த்தி 2ஆவது அணியாக இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இதனையடுத்து நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இறுதிப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 149 ஓட்டங்கள் எடுத்தது. மும்பை தரப்பில் அதிகபட்சமாக ஹர்மன்ப்ரீத் கவுர் 66 ஓட்டங்கள் எடுத்தார்.

டில்லி தரப்பில் மரிசான் கேப், ஜெஸ் ஜோனாசென் மற்றும் நல்லபுரெட்டி சரணி ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இதனையடுத்து 150 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி களம் கண்டது.

மெக் லேனிங் 13, ஷபாலி வர்மா 4, அடுத்து வந்த ஜெஸ் ஜோனசென் 13, அன்னபெல் சதர்லேண்ட் 2 ஓட்டங்கள் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதையடுத்து ஜெமிமா ரோட்ரிக்ஸ் மற்றும் மரிசான் கேப் ஜோடி சேர்ந்தனர். இருவரும் அதிரடியாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர். இதில் ஜெமிமா 30, அடுத்து வந்த சாரா பிரைஸ் 5 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து நிகி பிரசாத் களமிறங்கினார்.

மறுபுறம் நிலைத்து நின்று ஆடிய மரிசான் கேப் 40 ஓட்டங்களிலும், அடுத்து வந்த ஷிகா பாண்டே ஓட்டம் ஏதும் எடுக்காமலும் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழந்தனர். இறுதியில் டில்லி அணி 20 ஓவர்க ளில் 9 விக்கெட்களை இழந்து 141 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம், 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி 2ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றி அசத்தியது. அந்த அணி தரப்பில் நாட் ஸ்கைவர் பிரண்ட் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். (எ)

## இறுதிப்போட்டிக்கு ரூனே முன்னேற்றம்

கலிபோர்னியா, மார்ச்.17

இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் தொடரில் ஹோல்கர் ரூனே இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.



இந்த சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் டென்மார்க்கின் ஹோல்கர் ரூனே, ரஷ்யாவின் டானியல் மெத்வதேவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்ட ஹோல்கர் ரூனே 7-5, 6-4 என்ற செட் கணக்கில் டானியல் மெத்வதேவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். (எ)

## சபலெங்கா அபார ஆட்டம்


கலிபோர்னியா, மார்ச்.17

அரையிறுதி ஆட்டத்தில் அசத்திய அரினா சபலெங்கா இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இந்தியன்வெல்ஸ் ஓபின் சர்வதேச ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனைகளான பெலாரஸின் அரினா சபலெங்கா, அமெரிக்காவின் மேடிசன் கீஸ் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர்.

இதில், முழுவதுமாக ஆதிக்கம் செலுத்திய சபலெங்கா 6-0 மற்றும் 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.(எ)

## பிரேசில் அணியிலிருந்து நெய்மர் திடீர் விலகல்!



ரியோ டி ஜெனீரோ, மார்ச்.17

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தகுதிச் சுற்று போட்டியில் பங்கேற்றுள்ள பிரேசில் அணியிலிருந்து நெய்மர் விலகியுள்ளார்.

பிரேசில் உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரரான நெய்மர் 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடந்த உருகுவேக்கு எதிரான ஆட்டத்தில் இடது முழங்காலில் காயமடைந்தார். இதன் பிறகு அவர் பிரேசில் அணிக்காக விளையாடவில்லை.

இந்த நிலையில், 2026ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிக்கான தென் அமெரிக்க கண்டத்துக்குரிய அணிகளுக்கான தகுதிச் சுற்றில் பிரேசில் அணி எதிர்வரும் 20ஆம் திகதி கொலம்பியாவையும், 25ஆம் திகதி ஆர்ஜென்ரீனாவையும் எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டிகளுக்கான பிரேசில் அணியில் முன்கள வீரரான நெய்மர் இடம் பிடித்திருந்தார். ஆனால், சான்டோஸ் கழக அணிக்காக கடந்த வாரம் நெய்மர் விளையாடியபோது அவருக்கு தொடையில் காயம் ஏற்பட்டதாகவும், அதிலிருந்து மீண்டு முழு உடல் தகுதியை அவர் எட்டவில்லை என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில் உலகக் கிண்ண தகுதிச் சுற்றுக்கான பிரேசில் அணியிலிருந்து நெய்மர் விலகியுள்ளார். (எ)

## 2ஆவது போட்டியில் நியூசிலாந்து வெற்றி

கிறிஸ்ட்சர்ச், மார்ச்.17

இலங்கைக்கு எதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி அந்த நாட்டு மகளிர் அணிக்கெதிராக தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி - 20 தொடர்களில் விளையாடி வருகிறது. இதில், முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை நியூசிலாந்து 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையே தற்போது ரி - 20 தொடர் நடைபெற்று வருகிறது.

இதில், முதல் ஆட்டத்தில் இலங்கை வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் இருந்தது. இந்த நிலையில், இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி நேற்று நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 113 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. நியூசிலாந்து தரப்பில் ப்ரீ ல்லிங். ஜெஸ் கெர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இதையடுத்து 114 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 18. 3 ஓவர்களில் 3 விக்கெட்கள் மட்டும் இழந்து 117 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்தோடு, ரி - 20 தொடரை 1-1 என்ற கணக்கில் சமநிலை படுத்தியது நியூசிலாந்து அணி. (எ)



## சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் மே. இ. தீவுகள் வெற்றி

ராய்பூர், மார்ச்.17

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில் இலங்கையை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது மேற்கு இந்திய தீவுகள் அணி.

முதலாவது சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில் இந்தியாவின் ராய்பூரில் நடைபெற்ற 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் மேற்கு இந்திய தீவுகள் - இலங்கை அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 179 ஓட்டங்கள் எடுத்தது.

அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக ராம்டின் 50 ஓட்டங்கள் எடுத்தார். இதையடுத்து 180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் கண்ட இலங்கை அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 173 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.இதன் மூலம் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மேற்கு இந் திய தீவுகள் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. (எ)

## நியூசிலாந்து அசத்தல் பாகிஸ்தான் பரிதாபம்

கிறிஸ்ட்சர்ச், மார்ச்.17

பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதலாவது ரி- 20 போட்டியில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 ஆட்டங்கள் கொண்ட ரி - 20 தொடர் மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ரி - 20 போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் நேற்று நடைபெற்றது. பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்கம் முதல் நியூசிலாந்து அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் அணி அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தது. இதனால், 18.4 ஓவர்கள் முடிவில் 91 ஓட்டங்களுக்கு பாகிஸ்தான் அணி ஆட்டமிழந்தது. அந்த அணியில் குஷ்தில் ஷா 32 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து அணியில் ஜேகப் டபி 4 விக்கெட்களை வீழ்த்தினார். தொடர்ந்து 92 ஓட்டங்கள் இலக்குடன் நியூசிலாந்து அணி துடுப்பெடுத்தாடியது. இந்த நிலையில் வெறும் 10.1 ஓவர்களில் ஒரு விக்கெட் மட்டும் இழந்து 92 ஓட்டங்களை பெற்று 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டலந்த அறிக்கையின்படி...

"வாக்குறுதியளித்தபடி அரசாங்கம் அறிக்கையை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் 10 மற்றும் மே மாதங்களில் இரண்டு நாள் விவாதம் நடத்தப்படும். இந்த விவகாரம் தொடர்பாக ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அறிக்கையை நாங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் அனுப்புவோம்.

விவாதம் நடத்துவதற்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சியும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி குழுவும் வாதிட்டன. இருப்பினும், விவாதத்துக்கான திகதியை அரசாங்கத்தால் ஒதுக்க முடிந்தது.

நாட்டில் ஜனநாயகம் மற்றும் நீதிக்காக நாங்கள் விவாதம் நடத்துவோம். மக்கள் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். பட்டலந்த சம்பவம் குறித்து முழு விவரமும் அறிந்தவர் முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க. சமீபத்திய நேர்காணலில் அல் ஜசீரா பட்டலந்த பற்றிக்கூறும் வரை அவர் அதைப் பற்றி ஒருபோதும் பேசவில்லை. இன்றில்லை. கடந்த 35 ஆண்டுகளில் ரணில் இதைப் பற்றிப் பேசியிருக்கலாம். அல் ஜசீரா அதைப் பற்றிப் பேசும் வரை அவர் எதுவும் சொல்லவில்லை. ரணில் இப்போது மிகவும் தாமதமடைந்து விட்டார்" - என்றார்.

(ஐ)

## பட்டலந்த விவகாரத்தை...

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை மீண்டும் ஓர் ஊடகக் காட்சிக்கு கொண்டுவருவது பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது வரலாற்றுக்கு நீதி வழங்காது.

பட்டலந்த சித்திரவதைக்கூடம் மற்றும் அங்கு கொடூரமாக நடத்தப்பட்டவர்களின் வாழ்க்கை குறித்து மிகவும் அதிர்ச்சியை காட்டியவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. ஆனால், 10 ஆண்டுகளுக்கும் மேலாக அவர் ஆட்சியில் இருந்தபோதும் குற்றஞ்சாட்டப்பட்ட எவருக்கும் எந்தத் தண்டனையும் வழங்கவில்லை.

இருப்பினும், பட்டலந்த சித்திரவதைக்கூடத்தால் ஏற்பட்ட பொது மக்களின் சீற்றம் மற்றும் அதிர்ச்சியின் அடிப்படையில் அவரால் பல தேர்தல்களில் வெற்றி பெற முடிந்தது. பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான எங்கள் கருத்து என்னவென்றால் இது மீண்டும் அந்தத் திசையில் செல்கிறது.

சம்பவங்கள் நடந்து கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. சாட்சிகள், பொறுப்பான நபர்கள் பலர் இறந்து விட்டனர் அல்லது அவர்கள் வாழ்க்கையின் இறுதியில் உள்ளனர். பட்டலந்த சம்பவங்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருடன் அரசியல் ரீதியாக மிகநெருக்கமாகப் பணியாற்றிய தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தலைமையை நாம் அனைவரும் அறிவோம்.

நல்லாட்சி அரசாங் கத்தில் ரணில் பிரதமராக இருந்தபோது முன்னாள் சட்டமா அதிபர் ஒருவர் பிரதமரை விட அநுரகுமாரவையே அதிகளவில் அவரின் இல்லத்தில் சந்தித்துள்ளார். இத்தகைய அரசியல் நெருக்கத்தை பேணி வந்த இரு குழுக்கள் இன்று பட்டலந்த ஆணைக்குழு என்ற அறிவிப்பில் பிரிந்து விட்டதை ஏற்றுக் கொள்ள முடியும். இந்த நிர்வாகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக் காது - என்று குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

## பட்டலந்த அறிக்கையை...

செய்யும் இடம், சுதந்திர வர்த்தக வலயங்கள் உள்ளிட்ட முக்கிய கேந்திர இடங்கள் இருந்தன. இவற்றைப் பாதுகாப்பதற்காக இராணுவத்தினரும் பொலிஸாரும் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குத் தங்குமிடங்கள் வழங்க வேண்டிய பொறுப்பு இருந்தது.

அந்தக் காலகட்டத்தில் பட்டலந்த ஓர் உர உற்பத்தி நிலையமாக செயல்படவிருந்தது. அங்கு அரச ஊழியர்கள் சிலரும் வசித்தார்கள். இந்த நேரத்தில் சப்புகஸ்கந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் ஜே. வி. பியினர் படுகொலை செய்தனர். இன்னும் பல பொலிஸ் அதிகாரிகளையும், மாகாண சபை உறுப்பினர்களையும் படுகொலை செய்தனர். அப்போதைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின என்னைத் தொடர்பு கொண்டு இராணுவ அதிகாரிகள், பொலிஸார் பாதுகாப்பாக வசிப்பதற்கு பட்டலந்தவில் காலியாக இருந்த வீடுகளை ஒதுக்கிக் கொடுக்க வழிசெய்யுமாறு கேட்டார்.

இதன் பிரகாரம் அந்த வீடுகளை அப்போதைய களனி பொலிஸ் அத்தியட்சகர் நளின் தெல்கொடவின் பொறுப்பில் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பதவியில் இருந்த அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

அதன் பின்னர் 1994ஆம் ஆண்டின் பின்னர் சந்திரிகா அரசாங்கம், பட்டலந்தவில் வதைமுகாம் ஒன்று இருந்ததா என்பதைக் கண்டறிய விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைத்தது. அதன் முக்கிய நோக்கம், அரசியல் ரீதியாக சேறுபூசுவதாகும். அக்காலத்தில் நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தேன். 1999ஆம் ஆண்டு பட்டலந்தை ஆணைக்குழுவில் சாட்சியமளிக்கவே என்னை விசாரணைக்கு அழைத்தார்கள். மேலும் பலரும் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

ஒரு அமைச்சர் என்ற வகையில் பட்டலந்த வீட்டுத் தொகுதியில் சில பொலிஸ் அதிகாரிகளுக்கு நேரடியாக வீடுகளை வழங்கியது தவறு என்று குறிப்பிடப்பட்டது. பொலிஸ் மா அதிபர் ஊடாக அதனை வழங்கியிருக்கலாம் என்பதே ஆணைக்குழுவின் நிலைப்பாடு. மற்றும்படி எனக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லை.

ஆனால், ஆணைக்குழுவின் அறிக்கையில் மூன்றாம் அத்தியாயம் முழுக்க ஜே. வி. பியின் படுகொலைகள் குறித்தே குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வாறான நிலையில் இதுவரை காலமும் யாரும் பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஒளித்து வைத்திருக்கவில்லை. எந்தவோர் அரசாங்கமும் அதனைக் கொண்டு அரசியல் செய்ய முயற்சிக்கவும் இல்லை.

அது குறித்து விவாதம் நடத்த வேண்டுமென்று இதுவரை யாரும் கோரவில்லை. குறைந்த பட்சம் ஜே. வி. பியினர்கூட அப்படியான கோரிக்கையை முன்வைக்கவில்லை. இதன் காரணமாகவே குறித்த விடயம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவில்லை.

இதேபோன்று, பாராளுமன்ற அமர்வொன்றின் அறிக்கை குறித்து 25 வருடங்களின் பின்னர் பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்தும் சம்பிரதாயம் இதுவரை நம் நாட்டில் இருக்கவில்லை. அதுவும் ஒரு தவறான முன்னுதாரணமே - என்றார்.

(ஐ)

## போட்டியிடும்...

தெரிவித்தார்.

மேலும், சில இடங்களில் வேட்பாளர் நியமனங்களில் இருந்த பிரச்னைகள் தீர்க்கப்பட்டு, பெரும்பாலும் வேட்பாளர் நியமனங்கள் தொடர்பான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. எனவே, மிகவிரைவாக அடுத்தவாரம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வாம்.

அந்தவகையில், போட்டியிடும் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றும் என்ற நம்பிக்கை இருக்கிறது - என்றார். (ஐ)

## இலங்கையால்...

என்பது எனது கனவாக உள்ளது என்றும் கூறினார்.

கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் தூதுவர் கீ சென்ஹொங் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையுடன் சீனாவே முதன்முதலாக கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. அந்த வகையில் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு முதலில் இணங்கிய நாடாகவும் சீனா இருக்கின்றது. ஆனால், இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகள் இன்னமும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

இதேநேரம், இலங்கையுடனான கடன்மறுசீரமைப்பை சீனா மேற்கொண்டதன் மூலமாக பெருந்தொகையான நிதியை இழந்துள்ளது. கடன் மறுசீரமைப்பால் 700 கோடி அமெரிக்க டொலர்களை சீனாவின் எக்ஸிம் வங்கி இழந்துள்ளது.

இலங்கையின் கடன்மறுசீரமைப்புக்காக சீனா பெருந்தியாகத்தைச் செய்துள்ளதோடு அதிகளவான பங்களிப்பையும் வழங்கியுள்ளது. ஆனால், அந்த விடயங்களை சீனா பிரசாரம் செய்வதில்லை - என்றார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்த ஆண்டின் முற்பகுதியில் சீனாவுக்கு சென்றிருந்தார். அப்போது, 15 உடன்படிக்கைகள் கைச்சத்தாகின. அவற்றை விரைவாக நடைமுறைப்படுத்த இரு நாட்டுத் தலைவர்களும் இணங்கியுள்ளனர். இதன்மூலமாக இரு நாட்டு பிரஜைகளும் அதிகளவான நன்மைகளை அடையவுள்ளனர் -என்றார். (ஐ)

## வாக்குறுதியை...

மாவட்ட மக்கள் தொடர்பு மத்திய நிலையத்தால் கொழும்பு பேராயர் இல்லத்தில் நடந்த விசேட கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையிலுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்கிலேயே தற்போதைய ஆட்சியாளர்களை ஆட்சிப்பீடத்தில் ஏற்றினோம். ஆனால், அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்தாமலும் எமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும் இருந்து வந்தால் நாம் மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

அத்துடன், லசந்த விக்ரமதுங்க கொலை, பிரதீப் எக்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை, கீய்த் நொயர் தாக்கப்பட்டமை உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலும் உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கு தற்போது ஆட்சிபீடம் ஏறியுள்ள அரசாங்கம் இனியும் காலம் தாழ்த்தக்கூடாது.

இந்த விடயங்கள் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத்துக்கொள்ளாமல், எவருடனும் "டீல்" போடாமல் உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு அரசாங்கம் செயல்படுத்த வேண்டும் - என்றும் கர்தினால் கூறியுள்ளார். (ஐ)

## ஓ.எல்...

தகவல் தொடர்பு சாதனங்களையும் பரீட்சை நிலையத்துக்குள் கொண்டு வரக்கூடாது. அவை முற்றாக தடை செய்யப்பபட்டுள்ளன.

கைபேசி அல்லது தகவல் தொடர்பு சாதனம் மாணவரிடம் இருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளுக்கு பரீட்சை எழுதத் தடை விதிப்பது குறித்து பரிசீலிக்கப்படுகிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## தென்னக்கோனை...

சட்ட மா அதிபர் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய முதற்கட்ட விசாரணைகள் நிறைவடையும் வரை சந்தேகநபர்களை கைது செய்ய வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் அவர்களிடம் வாக்குமூலங்களை பதிவு செய்யுமாறும் சட்ட மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தவிர்ந்த ஏனைய 6 சந்தேகநபர்களின் நீதிப் பேராணை மனு இந்த மாதம் 21 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு வெலிகம - பெலென பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட 8 பேரை கைது செய்வதற்கு அண்மையில் மாத்தறை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது

இந்தநிலையில், மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தினால் தமக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணைக்கு இடைக்காலத் தடை உத்தரவு விதிக்குமாறு கோரி, பிரதிவாதியான தேசபந்து தென்னக்கோன் தமது சட்டத்தரணி ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான முடிவு இன்று வெளியிடப்படும் என முன்னதாக மாத்தறை நீதிவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதனிடையே, முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பொலிஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நோயாளரை...

தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான நோக்கம் மக்களின் சுகாதார நிலை மற்றும் சுகாதார பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதாகும். ஆகையால், இதனை சகல சுகாதார ஊழியர்களும் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுவார்கள் என சுகாதார அமைச்சும் அரசாங்கமும் நம்பிக்கை கொண்டுள்ளது.

சுகாதார நிபுணர்களுடன் கலந்துரையாடித் தீர்க்க முடியாத பிரச்னைகள் எதுவும் இல்லை. எந்த நேரத்திலும் அரசாங்கம் அவர்களுக்கான ஆதரவை வழங்கத் தயாராக உள்ளது. கடந்த அரசாங்கங்களைப் போலல்லாமல், தற்போதைய அரசாங்கத்துடன் தங்களுக்கு இருக்கும் எந்த ஒரு பிரச்னை தொடர்பிலும் கலந்துரையாடி தீர்வு பெறமுடியும்.

எந்த சூழ்நிலையிலும் அரசியல்வாதிகளின் நற்பெயரை அதிகரிக்க விரும்பவில்லை. மாறாக மக்களுக்கு தொடர்ந்து சேவைகளை வழங்க வேண்டும் என்பதில் கவனமாக உள்ளோம் - என்றார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பட்டலந்தவை மிஞ்சிய வதைகள் வடக்கு, கிழக்கில் இடம்பெற்றன!

## சிறீநேசன் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 17

**வடக்கு - கிழக்கில் பட்டலந்த வதை முகாமையும் மிஞ்சிய பல வதை முகாம்கள் - கொலை முகாம்கள் காணப்பட்டன - இவ்வாறு கூறியுள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன்.**

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் பட்டலந்த வதை முகாம் பற்றிய விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. புதைக்கப்பட்ட உண்மைகளும் சிதைக்கப்பட்ட மனித உரிமைகளும் பட்டலந்த இருட்டில் இருந்து சூரியஒளிக்கு வந்துள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். இது வரவேற்கத்தக்க விடயம்.

பட்டலந்த வதைமுகாம்கள் தொடர்பில் ஜே. வி. பி யினர் ஆட்சியதிகாரத்துக்கு வந்த பின்னர் - சுமார் 37 ஆண்டுகளுக்கு முந்திய உண்மைகளை வெளிக்குக் கொண்டு வந்துள்ளனர். அதாவது, ஜே. வி. பியினர் ஆட்சிக்கு வந்ததால்தான் ஜே. வி. பியினருக்கு எதிரான சட்ட விரோத கொடிய செயல் களை அம்பலத்துக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தமிழர்களுக்கு எதிரான இனவழிப்புகள் 1956இல் இருந்து ஆரம்பித்து 2009 வரை நடைபெற்றன. தற்போது தமிழர் பண்பாட்டு அழிப்புகள் நடைபெறுகின்றன. 1978 -2009 இற்கு இடைப்பட்ட பயங்கரவாத தடைச் சட்ட, அவசர காலச் சட்ட ஆட்சியில் வடக்கு - கிழக்கில் பட்டலந்த வதை முகாமையும் மிஞ்சிய பல வதை முகாம்கள் - கொலை முகாம்கள் காணப்பட்டன. அவற்றில் தமிழர்கள் வகை தொகையின்றி சித்திரவதைகள் பாலியல் வதைகள் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். பட்டலந்த வதை முகாம் படுகொலைகளை மிஞ்சிய சத்துருக்கொண்டான், கொக்கட்டிச்சோலை, கொண்ட வட்டவான், கரடியனாறு, கல்லடி போன்ற பல முகாம்கள் சித்தரவதை - படுகொலைகள் என்பவற்றுக்கு பெயர் போனவைகளாக இருந்தன.

ஒரே இரவில் 4 கிராமங்களைச் சேர்ந்த 186 பொதுமக்களை சித்திரவதை - பாலியல் பலாத்காரம் புரிந்து படுகொலை செய்த பெருமை சத்துருக் கொண்டான் இராணுவ வதை முகாமுக்கு உண்டு. குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் என்ற பேதமில்லாமல் சமத்துவ படுகொலை செய்த கொடூரம் சத்துருக்கொண்டான் வதைமுகாமுக்கு உண்டு.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் வடக்கு, கிழக்கில் பட்டலந்த போன்ற வதை முகாம்களுக்குப் பஞ்சம் இருக்கவில்லை. கொலைகள் சித்திரவதைகள் சிறீ லங்காவின் வன்மக்கலைகள் என்று சொல்லத்தக்க விதத்தில் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற சக்திகளாலும் துணைக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றை ஆராய்ந்து நீதி வழங்கும் தகுதி கடந்தகால அரசாங்கங்களுக்கு இருக்கவில்லை. தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமது ஜே. வி. பி. சகாக்கள் கொல்லப்பட்டதால் பட்டலந்த வதைகள் - கொலைகளை விசாரிக்க முன்வந்துள்ளன.

ஆனால், தமிழர்களுக்கு ஏற்பட்ட வதைகள், கொலைகள், காணாமல் ஆக்கப்பட்டமை போன்றவற்றை விசாரித்து நீதி வழங்கும் சம தர்மம் தேசிய மக்கள் சக்திக்கு இருக்குமா? என்ற ஐயம் தமிழர்களுக்கு உண்டு. பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதாலும் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் சிங்கள படையினர் என்பதாலும் இந்த சந்தேகம் தமிழர்களுக்கு கனதியாக உள்ளது - என்றார். (ஐ)

## மட்டக்களப்பில் வெள்ளம் போக்குவரத்து பாதிப்பு!



மட்டக்களப்பு, மார்ச் 17

மட்டக்களப்பில் நேற்று கனமழை பரவலாகப் பெய்தது. இதனால், தாழ்நில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கின. அத்துடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெய்த மழை காரணமாக வாழச்சேனை, கிரான், செங்கலடி, வெல்லாவெளி, போன்ற தாழ்நில பகுதிகளில் வெள்ளம் தேங்கியிருந்தது. இந்த நிலையில், நேற்று பெய்த மழையால் அந்தப் பிரதேசங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிரான், வாகரை, செங்கலடி, போன்ற பகுதிகளில் மக்கள் போக்குவரத்து செய்யும் பிரதான பாதைகள் ஊடாக வெள்ளம் பாய்கிறது. இதனால், அந்தப் பகுதி மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். இராணுவத்தினரின் உதவியுடன் பிரதேச செயலகத்தால் படகு சேவை வழங்கப்படுகிறது.

இதேநேரம், இந்த கனமழை மற்றும் வெள்ளத்தால் சிறுபோக வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இசை நிகழ்வில் வன்முறை 6 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 17

இசை நிகழ்ச்சியில் வன்முறையில் ஈடுபட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலநறுவை மெதிரிகிரியவில் உள்ள திவுலன்கடவல பிரதேசத்தில் அண்மையில் நடந்த இசை நிகழ்ச்சி நடந்தது. இதில், ஏற்பட்ட வன்முறை சம்பவம் தொடர்பிலேயே 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விளம்பரப்படுத்தப்பட்ட இரு பாடகர்கள் வருகை தராமை, ஆயிரம் ரூபாய் ரிக்கெற்றுகளை 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்தமை போன்ற காரணங்களால் வன்முறை ஏற்பட்டதாகத் தெரிய வருகின்றது.

கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களும் மெதிரிகிரியவை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## தனிநபர் மாதாந்த செலவு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 17

கடந்த ஜனவரி மாதத்தில் தனிநபர் மாதாந்த செலவு அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவர திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டின் ஜனவரி மாதம் தனிநபர் செலவினம் அதிகரித்துள்ளது. கடந்த ஜனவரி மாதத்தில் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய தனிநபருக்கு 16 ஆயிரத்து 334 ரூபாய் தேவை. இதுவே கடந்த ஆண்டு டிசெம்பரில் 16 ஆயிரத்து 191 ரூபாயாக இருந்தது.

தனிநபர் செலவினம் அதிகம் உள்ள மாவட்டமாக கொழும்பு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு தனிநபரின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்ய 17 ஆயிரத்து 617 ரூபாய் தேவை.

செலவினம் குறைந்த மாவட்டமாக கிளிநொச்சி உள்ளது. இங்கு ஒருவரின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்ய 15 ஆயிரத்து 780 ரூபாய் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## பொருளாதார குற்றங்களுக்கு எதிரான ஆய்வுக்கு வெளிநாட்டு ஆலோசகர்!

கொழும்பு, மார்ச் 17

பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவி ஆகிய பொருளாதார குற்றங்களுக்கு எதிரான ஆய்வுக்கு தயாராவதற்காக இலங்கை ஒரு வெளிநாட்டு ஆலோசகரை பணிக்கு அமர்த்தியுள்ளது.

சட்டத்தரணியும் பணமோசடி தொடர்பான ஆசிய - பசுபிக் குழுவின் முன்னாள் நிர்வாக செயலாளருமான கோர்டன் ஹூக், இலங்கை மத்திய வங்கியால் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் அவருக்கான கொடுப்பனவு மற்றும் விதிமுறைகளை இலங்கை மத்திய வங்கி வெளியிடவில்லை.

ஹூக், 2025 மார்ச் 25 முதல் உரிமம் பெற்ற வங்கிகள் உட்பட, இடைவெளிகளை கண்டறிந்து 2026இல் பரஸ்பர மதிப்பீட்டுக்குத் தயாராவதற்காக ஒரு மதிப்பீட்டை மேற்கொள்வார் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதிய பரிந்துரையின்படி இந்த ஆலோசகர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## மண்சரிவால் பாதிக்கப்பட்ட 51 குடும்பங்களுக்கு வீடுகள்!



கொழும்பு, மார்ச் 17

மண்சரிவால் பாதிக்கப்பட்ட 51 குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டத்துக்கு நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டப்பட்டது.

பதுளை - பூனாகலை - கபரகலை தோட்ட குடியிருப்பில் 2023 மார்ச்சில் ஏற்பட்ட மண் சரிவால் சுமார் 51 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இந்தக் குடும்பங்கள் கடந்த இரண்டு வருட காலமாக பூனாகலை மாகந்த தேயிலை தொழிற்சாலையில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் குடும்பங்களுக்கு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 10 பேர்ச் காணியில் நிரந்தரமான வீடுகளை அமைத்து கொடுப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு வீட்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

## 14,300 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல் ஏலத்துக்கு

கொழும்பு, மார்ச் 17

14 ஆயிரத்து 300 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் 19ஆம் திகதி ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,182 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 5 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 6 ஆயிரத்து 800 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. (ஐ)

## பேஸ்புக் மூலம் கூடி விருந்து; 29 பேர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, மார்ச் 17

பேஸ்புக் மூலம் ஒன்றுகூட்டப்பட்ட விருந்துபசாரத்தில் 29 பேர் கைது செய்யப்பட்டனர்.

கம்பஹா - பியகம பகுதியில் உள்ள ஹோட்டலில் நேற்றுமுன்தினம் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

119 அவசர உதவி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் மூவரிடமிருந்து போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

கைதானவர்கள் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org